
நான்
உளவியல் மஞ்சரி
விலை: 5

சுகாதார முறையில்
உடல் சுகத்திற்கு அருமருந்தாகவும்
உங்கள் விருந்தினரை மகிழ்விக்கவும்,
அருந்த உகந்தது

## தோலகட்டி தயாரிப்புக்கள்

★ நெல்லிரசம் ★ முந்திரிகைரசம் ★ மாதுளைரசம்
★ நன்னாரிரசம் ★ ஊறுகாய் ★ குருதைலம்
செபமாலை, புனிதர்களின் வரவணிக்கங்கள்,
'நான்' வெளியீடுகள்.

இன்னும் பல பொருட்களை நீங்கள் யாழ் நகரிலேயே தடையின்றி
பெறுவதற்கு ஓர் நிலையம் கீழ்க்காணும் முகவரியில்
ஆரம்பித்துள்ளது.

**உண்மையான அசல் தோலகட்டி தயாரிப்புக்களைப் பெற
இன்றே நாடுங்கள்**

**தோலகட்டி விற்பனை நிலையம்
37, கோவில் வீதி,
[ஆஸ்பத்திரி வீதி — கோவில் வீதி சந்தி]
யாழ்ப்பாணம்.**

இயக்குனர்:

**செபமாலைதாசர் ஆச்சிரமம்,**
**தோலகட்டி,**
**வசாவிளான்.**

**அருள் ஆச்சிரமம்,**
**5, ரெம்பிள் ரோட்,**
**யாழ்ப்பாணம்.**

# அவசரம் இது அவசியம்

மலர் 14 ❋ அறியாமை ❋ இதழ் 6

கார்த்திகை 1989 மார்கழி

அவசரமான உலகினிலே அவசியமானதும், அவசியமற்றதுமான நிகழ்வுகள் தொடர்கின்றன. அழுகைகள், அவலங்கள், அட்டூழியங்கள், அந்தியப்பாடுகள் போன்றன அறியாமையின் காரணமாக அதிகரித்து செல்லுகின்றன. அவனியில் அமைதியைக் காண ஆளுமையில் அன்பினைத் தேடும் மனிதன் தன்னையும் அறியாமல், தன்னைச் சார்ந்தோரையும் அறியாமல், வாழ்க்கையின் உள் அர்த்தத்தை புரியாமல் தத்தளிக்கின்றான். அவனது நியாயமான எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படாத நிராசைகளாகின்றன. உன்னில் என்னைக் காணவும் என்னில் உன்னைக் காணவும் முனையும் உள்ளங்களின் உறவின் பரிமாணம் இன்னும் பரிதாபத்துக்குரியதாகவே காணப்படுகின்றது. மனித உறவினை, மனித உணர்வினை, மனித உயிர்த்துடிப்பினை, இதயந்து தொடுகையினை, இதயங்களின் இனிய இராகத்தினைக் கேட்டு, அவற்றை அன்றாடம் அனுபவிக்க வேண்டிய அவசியத்தை நாம் உணர்ந்தேயாக வேண்டும்; மனித வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்து அதற்குச் செயல் வடிவம் கொடுத்தே தீர வேண்டும். மனிதனை மனிதன் மதியாது, மனித உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்காது, மட்டரகமான மனித சமுதாயத்தினை தோற்றுவிக்கும் அவல நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்தே ஆக வேண்டும்.

எனவே,

அன்புத் தாகத்தைத் தீர்க்கும் சுனைகளாக
அன்பினை அவனியில் காண,
அமைதியின் சுவடுகளை
அழியாமல் காப்போம்.

— ஆசிரியர்

## உள்ளே...

இழப்பு
— S. டேமியன் M. A.

குடும்ப டொக்டர் பதில்

சிறை — சிறுகதை
— செயோன்

மனவிரிசல்கள்
— சாவி

அறியாமை ஓர்
அறவியல் கண்ணோட்டம்
— லோ. வ. இராயப்பு மா. ம. தி.

கருத்துக் குவியல் 58

வாசி பின் யோசி
— ஏ. பி. வி. கோமஸ்

அறியாப் பருவம்
அழைக்கிறது
— — அ. றூபராஜ்

அடுத்து வெளிவருகிறது:

"சிறப்பிதழ்"

உங்கள் ஆக்கங்களை உடன் எழுதி
அனுப்புங்கள்

ஆசிரியர்:
வின்சன்ற் பற்றிக் O. M. I, B. A.
இணை ஆசிரியர்:
S. டேமியன் O. M. I, M. A.
துணை ஆசிரியர்:
ஜோசப் பாலா
ராஜன் மங்களா
வினிபிரட்
அன்புராஜ்
தொடர்பு:
நிக்ஸன்
அல்றின்
செபநேசரத்தினம்
இயுஜின்
அமைப்பு:
அந்தோனிமுத்து
ஜெறோம்
S. நியூமன்
றெனி
அச்சமைப்பு:
''மணி ஓசை''
வினியோகம்:
விமலருஜன்
துஷ்யந்தன்
வென்ஸஸ்லஸ்
பொருளாளர்:
ஜெயசிங்கம் O. M. I.
ஆலோசகர்:
B. இராயப்பு O. M. I S. T.D

தொடர்பிற்கு:-
'நான்' ஆசிரியர்
வசந்தகம்,
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை.

தனிப்பிரதி: 5 — 00 ஆண்டுச் சந்தா: 30 — 00

# அமைதிக்கான விதைகளை விதைப்போம்

— ஜீவகன் —

''அமைதி'' —

அதையே தான் இன்று உலக மக்கள் விரும்புகின்றனர். மானிட வர்க்கம் துன்பங்கள், துயரங்கள் வருந்துதல்களில் இருந்து மீட்சி, பெற்று அன்பும், நல்லெண்ணமும், புரிந்துணர்வும் கொண்டதாக அமைய வேண்டும் என எல்லோருமே எதிர்பார்க்கின்றனர்.

ஆனல்......!

அமைதியை எப்படி அடைவது என்பதை மக்கள் புரிந்து கொள்ளாமல், இருந்து கொள்கின்றனர்.

அமைதி என்பது வேறு எங்கோ இருந்து நமக்கு வரப்பிரசாதமாகக் கிடைக்க வேண்டும் என்றும், அமைதியை வேறு யாரோ தான் தங்கத்தட்டில் வைத்துக் கொடுத்து ''அனுபவியுங்கள்'' என்று சொல்வார்களோ எனவும் நினைத்துக் கொள்கின்றனர்.

தனிமனிதன் மத்தியில் ஏற்படும் அமைதிதான், சமுதாயத்தின் அமைதியாகத் திகழ முடியுமே ஒழிய, சமுதாயத்தில் ஏற்படும் அமைதியால் தனிமனிதனை அமைதியாக வாழச் செய்தல் என்பது இயலாத காரியமாகும்.

அமைதியை எப்படி அடைவது? அனுபவிப்பது? என்று எல்லோர் மத்தியிலும் ஒருவித மயக்க உணர்வு காணப்படுதலை அறியலாம்.

அமைதியாக நாம் வாழ வேண்டுமாயின், அமைதிக்கான சிந்தனைகள், மக்கள் மத்தியில் விதைக்கப் படடல் வேண்டும்.

மனித இதயங்களில் அன்பை, சகோதரத்துவத்தை. நல்லுணர்வுகளை, ஜீவகாருண்யத்தை ஏற்படுத்திக் கொண்டால் அமைதிக்கான நிரந்தப பாதைகளை வகுத்துக் கொள்ள முடியும்.

எனவே, உலகில் நிரந்தரமான அமைதி நிலவ வேண்டும் என்ற விருப்பம், லட்சியம் கொண்டவர்கள் அமைதிக்கான விதைகளை கிராமம், கிராமமாக விதைக்க ஆரம்பித்தல் வேண்டும்.

கோபம், வெறுப்பு, புரிந்துணர்வு அந்த நிலையில் அமைதியை ஏற்படுத்திக் கொள்வது என்பது சாத்தியப்படாததாகும்.

அமைதிக்கான விதைகளை விதைக்கும் போது, அவ்விதைகளை ஆக்கவழிப்பட்ட முறைகள் மூலமும், ஆக்கவழிப்பட்ட சிந்தனைகள் மூலமுமே ஏற்படுத்திக் கொள்ளல் மிக அவசியமாகும்.

உலகில் அமைதி நிலவச் செய்தல் ஒவ்வொரு குடிமகனின் முன்னுள்ள பொறுப்புள்ள, ஆக்கப் பணி என்பதை மனத்தில் இருத்தி, ''என் பணி அமைதிக்கான பணி'' என்ற பெரு நிலைப்புடன் செயல்பட்டால் நிச்சயமாகப் பலன் கிடைத்தே தீரும்.

அமைதி, அமைதியின்மை யாவும் மனிதனின் மனத்தில் இருந்து ஊற்றெடுப்பதாகும். அமைதியில் நாட்டம், நம்பிக்கை, விருப்பம் இல்லாதவர்களினால் அமைதியை ஏற்படுத்துதல் என்பது கல்லில் நார் உரிப்பது போன்றதாகும்.

எனவே, சமுதாயத்தின் முதல் தேவையாகிய ''அமைதி''யை நிரந்தரமாக ஏற்படுத்திக் கொள்ள ''அமைதி விதைகளை'' பட்டி, தொட்டி எங்கும் விதைப்போம்.

அமைதி விதைகளை மக்கள் மனங்களில் உயிர்பெற்று ஆல விருட்சமாக வளரும் போது, நம் மத்தியில் ''அமைதி'' நிரந்தரமாகிவிடும்.

மக்கள் அமைதியான சூழலில் வாழவே விரும்புவார்கள். அமைதியை ஏற்படுத்தப் பாடுபடுபவர்கள் ஆண்டவனுக்கு ஊழியம் செய்பவர்களாகக் கருதப்பட்டு, சமுதாயத்தில் ஏற்றிப் போற்றப்படுவார்கள்.

ஆதலால், இன்றே அமைதிக்காக விதைகளை விதைப்போம்.

*''மனங்களைப் பண்படுத்தி*
*அன்பு விதைகளைத் தூவிடுங்கள் — கெட்ட*
*குணங்களைப் பிடுங்கி அங்கே*
*அமைதிப் பயிரினை வளர்த்திடுவோம்.''*

---

## எழுத்தாளர்களே!

**15 - வது ஆண்டு சிறப்பிதழை உங்கள் ஆக்கங்களால் அலங்கரிக்க விரைவாக அனுப்பி வையுங்கள்.**

---

# ஓவிய, சிற்ப, புகைப்பட நூல் கண்காட்சி

— வானம்பாடி

யாழ்நகரில் இந்துகல்லூரியில் தீபாவழித் தினத்தில் அறிவுத் தீபத்தை கண்காட்சியாக ஏற்றி வைத்து எல்லோர் மனதிலும் புதிய சிந்தனை தூவல்களை விதைத்து மக்கள் மனதில் புதிய உச்சாகத்தை ஏற்படுத்த முனைந்த ஓவிய, சிற்ப, புகைப்பட, நூல் கண்காட்சி அமைப்பாளருக்கு பாராட்டுகள் பல.

நாட்டுச்சூழல், நெருக்கடிநிலை, பாதுகாப்பு இன்மை என எத்தனையோ நிகழ்சிகளை பின்போட்டு, சாட்டுக் கூறி தப்பித்துக் கொள்ளும் எமது சமூகப் போக்கிற்கு, முயன்றால் முடியாதது அல்ல; முயற்சியே வெற்றியின் ரகசியம், என்பதனை குறுகிய கால முயற்சியில் ஒரு கூரையில் பலவித பயன் உள்ள, அறியப்படாத பலரது திறமைகளையும் ஆக்க இலக்கிய, அறிவு சார்ந்த நூல் சுரங்கத்தின் நுளை வாயிலில் நுளைவது போன்று ஓரளவு ஒழுங்கமைத்து, பலகோணத்தில் பல தலைப்புகளில் எழுத்துலகில் இயங்கிவரும் எழுத்தாளர்களையும், ஒரேமேடையில் கலந்துரையாட வைத்ததும், கருத்துக்கள் பரிமாறப் பட்டதும், ஓர் சாதனை தான்.

அரசமட்ட அதிகாரியாக இருந்தும், இலக்கிய ஆவலும் அதன் வளர்ச்சியில் அக்கறைப்பட்டு செயல்பட்டுவரும் உள்ளூராட்சி உதவி ஆணையாளாருமான திரு. சு. டிவகலாலா அவருக்கும் துணையாக தூண்களாக இருந்து இயங்கிய சனசமுக நிலைய சமாசங்கம், யாழ். ஜெட்டறிகழக நிறுவனம் முதல் கண்காட்சி அமைப்புக் குழுவினர் ஒவ்வொருவரது முயற்சியின் பங்கும் அளப்பரியது.

''இருளைப் பழிப்பதை விட ஒளி ஏற்றுவதேமேல்'' நடந்தவைகளில் உள்ள குறை நிறைகளை விவாதிப்பதை விடுத்து, அவற்றில் அறிந்தவற்றை திருத்திய முறையில் பகுதி பகுதியாக, பல பாங்களிலும் தங்கள் தங்கள் வசதிக்கேற்ப சிறிய முயற்சிகளாக வேனும் கிராமங்கள், சிறியநகரங்கள் எங்கும் அறிவுச் சுடரை ஏற்றி வைக்க எப்படிப்பட்ட செயல்கள் புரியலாம் என்பதை உணர்ந்து செயல்பட முனைவோம்.

எழுதுவது யாருக்கு, சாதாரன வாசகருக்கா? அல்லது எழுத்து

லகில் உள்ளவர்களுக்கு மட்டுமா? அல்லது விமர்சனங்களின் அளவு கோலுக்கு அளவாக பாராட்டை பெறும் நோக்குடனு அல்லது பாமர மக்கள் மத்தியில் வாசனைத் தூண்ட லுடன் அவர்களின் அறிவு விசாலிப்புக்கு வழிசெய்யவா எழுது வது என்பதனை உணர்ந்து அந்த வகையில் சகல வாசகரிடமும் சென்றடைய வேண்டுமானால் தூண்டுதல்களுக்கு எமது பங்களிப்பு கள் என்ன என ஒவ்வொரு அமைப்புகளும் முயன்றால் முடி யாத தொன்றல்லவே.

கருத்துகள், விமர்சனங்கள், தனிநபர்களைத் தாக்குவதாக இல் லாது, கருத்துக்களை கருத்துரீதி யாக அறிவு விசாலிப்புக்கு ஏற்ப பரிமாறினால் எமது இலக்கிய உலகில் பல வித முன்னேற்ற சிந்தனைகளை வளர்த்து அதன் மூலம் வாசகர் மத்தியில் நல்ல அறிவு விதைகளை விதைத்து பல அறிவாளிகளை உருவாக்கலாம். வெறும் கோஸ்ரி மோதல், தனி நபர் கிண்டல் பேச்சுக்கள் தொடரு மானால் இதுவரை வந்த பாதை யைத்தான் நாமும் தொடர்கிறோம் என்றாகிவிடும்.

புதிய வாசகர் எழுத்தாளர்களு க்கு முன்மாதிரியான கருத்துபரி மாற்றங்கள், அவர்களின் அறிவு விசாலுப்புக்கும் வழிகாட்ட உத வும், அதை உணர்ந்து தங்கள் கௌரவத்துடன் ஏனையவர்களுக் கும் வழிகாட்டிளாக வாழ்வது தான் சமுக முன்னேற்றத்திறகும் நாம் செய்யும் பயன்பாடாகும்.

கிராமமட்டத்தில், சனசமூக நிலையங்கள், தனியார் கல்விக் கூடங்கள், சமூக நிறுவனங் கள், எழுத்தாளார் மன்றங்கள் மாதம் ஒருமுறையேனும் கலந் துரையாடல் மூலம் அவர்களின் வாசக, எழுத்து பயிற்சியினை ஊக்கு விக்கும் முயற்சியில் ஈடுபடுவதால் மறைத்து வாழும் புதிய திறமை சாலிகளையும், அறிமுகப்படுத்தலாம். இப்படிப்பட்ட திறமைசாலிகள்கூட பணவசதியற்று தங்கள் திறமை களை செயல்படுத்த முடியாத சூழுலும் இருப்பதால் கூட்டு முயற்சி மூலம் புதியவர்களை வெளிக் கொணர முயற்சிக்கலாம், பயிற்சி கள், பட்டறைகள் மூலம் உங்கள் பகுதியிலும் நல்ல பணி களை செயல்படுத்தலாம். ஆண்டு விழாக்களில் முடிந்தவரை அங் குள்ள திறமைகளை வெளிப்படுத்துவ துடன்உச்சாகப்படுத்தும் முயற்சியில் முயல கண்காட்சிகள் கலந்துரை யாடல்கள் மூலம் உங்கள் பகுதியை முன்னேற்றவும் பாடசாலை மட்டத்திலும், பரிசளிப்புகளிலும் வாசிப்பு எழுத்துக்கும், கைவினை திறனுக்கும், உச்சாகப்படுத்துவதால் திறமைசாலிகளின் திறமைகள் ஏனையவர் அறியவும் வழிகாட்டி களாக மாறுவதில் தான் முன் னேற்றப் பாதைக்கு ஒளி ஏற்றுபவர் களாக மாறலாம்.

இவை போன்றவற்றுக்கு ஆரம்ப விழாவாக அமைந்ததாக எண்ணு வோம். அந்த அறிவுச் சுடரை எல் லாப்பகுதிக்கும் ஒளிரச் செய் வோம். அந்த ஒளியில் இல்லாமை என்ற இருளை அகற்ற ஒற்றுமையில் அறிவுத்தீபத்தை அணையாது காப்போம். ●

## சிரிப்புச் சுவை

— செ. அந்தோனிமுத்து

ஆசிரியர் :- அண்ணே! அமெரிக்காவில வாழ்ந்த பேட் என்பவருக்கு இம்முறை நோபல் பரிசு கிடைத்தது ஏனென்று தெரியுமா?

மற்றவர் : நோ......

ஆசிரியர் அவருக்குப் பிறந்ததில இருந்து இன்னும் பல் முளைக்கல்ல அதுதான்

மற்றவர் : ........?

ஒருவர் :- என்ன பாசம் அவருக்கு... அன்பு நிரம்பி வழியுது வெள்ளம் போல.

மற்றவர் : ஓம்...சரியாய்ச் சொன்னீங்க... இப்ப மழைகாலம்தானே...

ஆசிரியர் :- உங்கள் பெயரைக் காப்பாற்றப் பாடுபடுங்கள்; விளங்கினல் மட்டும் போதாது செயல்படுத்துங்கள்.

மாணவர்கள்: அப்படியே செய்கின்றோம் சேர்.

ஆசிரியர் : தம்பி கரண்ட் அநியாயமாகப் போகுது அந்த விளக்கை அணைத்து விடு

மாணவர்கள் : சேர்... என் பெயர் அணையா விளக்கு

ஆசிரியர் : !!!

## வாழ்த்துக்கள்

புத்தக வெளியீட்டுத் துறையில் புதியதொரு அத்தியாயத்தை ஆரம்பித்துவைத்த 'நான்' மஞ்சரியே உனது பணிசிறக்க, உனது புகழ் ஓங்க எனது பாராட்டுக்கள். தொடர்ந்தும் எமது எதிகால இளம் தலைமுறையினருக்கு உனது அறிவுரைகளை வாரி வழங்க எனது பலகோடி வாழ்த்துக்கள்.

S. அல்பிறட்

## இழப்பு

S. டேமியன் M. A

சிதைந்து நொறுங்கிய உடல்கள், கிழிக்கப்பட்ட உடல்கள், கண்டதுண்டமாக வெட்டப்பட்ட உடல்கள். சித்திரவதை செய்யப்பட்ட உடல்கள், முடமாக்கப்பட்ட உடல்கள் இரத்தம் வழிந்தோடும் உடல்கள்–துப்பாக்கி துளைத்த உடல்கள், கண்ணிவெடி, மிதிவெடியினல் கால், கை அங்கங்கள் இழந்த உடல்கள். இவைகள் தான் இன்று நாம் காணும் துயரங்கள்; இழப்புக்கள்:

**துயரத்தின் இறுக்கங்கள்:**

இங்கு குறிப்பாக உடலிலே இருக்கின்ற அவயவங்களை இழக்கும் போது எத்தகைய உளவியல் துயரங்

கடந்த ஆறு வருடங்களாக நமது சமுதாயம் இழப்புக்களையும், அதனல் துயரங்களையும் கொண்ட சமுதாயமாகத்தான் வாழ்கிறது. அன்ருடம் பல வித இழப்புக்களை நாம் காணக் கூடியதாக இருக்கிறது. நாம் அன்பு செய்தவர்கள் திடீரென்று இறக்கும் போது அவரின் மறைவு நமக்கு இழப்பை ஏற்படுத்துகின்றது. வியாபாரம், தொழில், இவற்றில் நட்டம் ஏற்படும் போது இழப்பு அங்கே தெரிகிறது. குடும்பங்களிலே பிணக்குகள் ஏற்படும் போது அங்கே இழப்பு. குறிப்பாக போர்காலங்களில் கணக்கிட முடியாத இழப்புக்கள் நமக்கு ஏற்படுகின்றன. ஷெல் அடி, குண்டு வீச்சு, சித்திரவதை, கற்பழிப்பு இவை நமக்கு சொல்லமுடியாத துயரத்தையும் தருகின்றது. இயற்கையின் அழிவுகளும் நமக்கு இழப்பை உண்டு பண்ணுகின்றது (உ + ம்) பெரு வெள்ளம், பூமி அதிர்ச்சி, விபத்துக்கள், விமான விபத்து, உடலில் ஏற்பட்டகாயங்கள், வடுக்கள், தழும்புகள், அங்கவீனங்கள் குறிப்பிடத்தக்கனவையாகும்.

சிறிய பொருட்களை நாம் இழந்துவிட்டால் நாம் பதறி துடிதுடித்து விடுகின்ருேம். உ + ம் வீட்டு சாவியை நாம் இழந்துவிட்டால் கூட பதை பதைத்துப் போகிருேம். இன்று அடையாள அட்டையை இழந்து விட்டால் வெளியே சென்று அன்ருட கடமைகளைச் செய்ய பின்வாங்கிவிடுகின்ருேம். முகாம்களை நாம் அண்மித்து செல்லும்போது நம்மை அறியாமலே நமது கைகள் சட்டைப் பைக்குள் சென்று ஒருகணம் திடீர் சோதனை போட்டுவிடுகின்றன. இப்படிச் சிறிய பொருட்களை இழக்கின்றபோது பரபரப்பும், துயரமும் ஏற்படுகின்ற தென்ருல், வாழ்க்கையிலே ஈடுசெய்ய முடியாத இழப்புக்கள் வரும்போது நாம் அனுபவிக்கும் துன்பங்களை, துயரங்களை சொல்லவும் வேண்டுமா? அண்மைக்கால நிகழ்வுகள் குறிப்பாக பல விதமான இழப்புகள் நம்முடைய உடலிலும் உள்ளத்திலும் பல பாதிப்பை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கள் ஏற்படுகின்றன என்பதை ஆராய்வோம்.

**இழப்பின் இறுக்கங்கள்:**

**1.** அவயவங்களை இழந்தவர்கள், முதலில் தாங்கள் தங்களின் அவயவங்களை இழந்துவிட்டதை மறந்துவிடுகிறார்கள். இந்த உண்மை நிலையை ஏற்க மறுக்கிறார்கள். அவயவங்களை இழந்த நிலையிலும் தாங்கள் இன்னும் அந்த இழந்த அவயவத்தோடு தான் இருக்கின்றோம் என்ற நினைப்பில் உழைக்கிறார்கள். இந்த உண்மையை விகிதாசாரக் கணிப்பின்படி ஆராய்ச்சியாளர்கள் நிருபித்துள்ளார். இந்த மறுப்பு ஒரு உண்மை நிலையாகும்.

2. திடீர் எதிர் செயல்

இழப்புணர்வின் முதல் எதிர்ச்செயல் அதிர்ச்சியடைவதாகும். (உ + ம்) அவயவத்தை இழந்தவர்கள் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப் படுமுன் தங்களுடைய அவயவம் வெட்டப்படப்போகின்றது என்று அதிர்ச்சியடைகிறார்கள். கூடுதலாக பதட்டம், அமைதியின்மை, மன இறுக்கங்களுக்கு உள்ளாகின்றார்கள். அத்தோடு சத்திர சிகிச்சை முடிவடைந்த காலத்தில் பசியின்மை நிறைகுறைவு, நித்திரையின்மை போன்ற அறிகுறிகள் காணப்படுகின்றது.

## பல்லாண்டு காலம் வாழ்க

நானின் வளர்ச்சியில் பங்கேற்று வாசக இதயங்களின் மன குமுறல்களை தீர்த்து வந்த **லுமினு அன்ரனிப்பிள்ளை அவர்கள் 15-12-89 ல் செல்வன் ரைற்றஸ் ருஜனுடன்** மணவாழ்வில் இணைய இருப்பதால் அவர்களது மணவாழ்க்கை சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆ – ர்

3. அவயவங்களை இழந்தவர் அநேகமாக வெறுப்பு, கோபம், போன்ற எதிர்ப்புஉணர்களினால் பாதிக்கப் படுகின்றார்கள். மற்றவர்கள் ஆரோக்கியமாக இருப்பதை காணும் போது ஒருசிலருக்கு வெறுப்புணர்வு அவர்கள் மேல் ஏற்படுகின்றது. தங்களையே மனம் நொந்து கொண்டிருப்பார்கள். இந்த நிலைக்கு தங்களை உள்ளாக்கியவர்கள் மீது கோபப்படுகிறார்கள்.

4. இந்த இழப்பிற்கு ஆளானவர்கள் தங்களை பற்றி தாக்குறைவாக மதிப்பீடு செய்வதுடன் தாங்கள் இவ்வுலகில் இல்லை என்ற உணர்வுடன் வாழ முற்படுகிறார்கள். இந்த உலகம் ஒரு பொய் என்ற ஒரு விரக்திமனப்பான்மைக்கு தள்ளப்படுகிறார்கள். இவர்கள் மற்றவர்களைவிட குறைவானவர்கள் என தாழ்வு மனப்பான்மை கொண்டிருப்பார்கள்.

---

கால் தடுமாறினால் சமாளித்துக் கொண்டு நிற்காலம். ஆனால் நரம்பில்லா நாக்குத் தவறினால் மீளவே முடியாது.

— விளி

# குடும்ப டொக்டர் பதில் தருகிறர்

☐ எனக்கு பசி குறைவு. சொற்பம் சாப்பிட்டவுடன் அதிகம் சாப்பிட்டது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. அடிவயிற்றில் அடிக்கடி நோகின்றது. எனது வயது 2‡. எனது பிரச்சினைக்கு உங்கள் தீர்வு என்ன?

ஜெயந்தி
கிளிநொச்சி.

●● பசிக்குறைவு வேறு நோய்களின் அறிகுறியாக இருக்கலாம். பசிக்குறைவுடன், நிறையிலும் குறிப்பிடத்தக்க அளவு ஏற்பட்டால் உடனடியாக வைத்திய பரிசோதனை செய்து சிகிச்சை பெறுதல் நன்று.

அடி வயிற்றில் எந்த வேளைகளில் நோவு ஏற்படுகின்றது என்று நீங்கள் குறிப்பிடவில்லை.

உளவியல் தாக்கங்களினுலும் (உ+ம் மனச்சோர்வு - dipression) இவ்வாறு ஏற்படலாம். உங்களுடைய இநநிலைக்கு எது காரணமாக இருக்கும் என்று அறிந்து அதற்கேற்றவாறு சிகிச்சை பெறுவது நன்று.

☐ தொடர்ச்சியாக இருந்து வாசிப்பது அல்லது எழுதுவது மிகவும் கஷ்டம். காரணம் நாரிப்பிடிப்பு இப்படியான வேளைகளில் நான் படுத்து ஓய்வெடுப்பது வழக்கம் இதிலிருந்து நான் விடுபட உங்களது ஆலோசனையை எதிர்பார்க்கிறேன்.

சிவராமு
முள்ளியவளை.

●● இவ்வாறு நாரிப்பிடிப்பு ஏற்படுவதற்கு மூட்டில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்.

'Stress' (அங்கலாய்ப்பு நிலை) இனுலும் இவ்வாறு ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. (இது Psycho Somatic) எனப்படும். அவ்வாருயின் அமைதியான மனநிலையை உருவாக்க தியானம் போன்ற பயிற்சிகளில் ஈடுபடுதல் நன்று.

முன்னைய வகையினதாயின் நேரடியாக வைத்திய பரிசோதனைக்கு உட்பட்டு சிகிச்சை பெறுவது நன்று.

☐ எனது இடது காதில் சில வேளைகளில் தாங்கமுடியாத வலி ஏற்படுகிறது. அத்துடன் தெளிவாகக் கேட்பதும் குறைவு. நான் குணம் பெற இலகுவான வழி என்ன?

சகாயன்
கல்முனை.

●● காதில் தாங்க முடியாத அளவு வலி ஏற்படின் உடனடியாக காது, மூக்கு,

தொண்டை சத்திர சிகிச்சை நிபுணரை நாடுவதே சிறந்த வழியாகும்.

காதில் உள்ள சாதாரண சுரப்பிக்கள் 'குடும்பி' (wax) கடினமடைவதாலும் இவ்வாறு ஏற்படலாம்.

அல்லது கிருமித் தொற்றினால் (Infection) ஏற்படலாம். அவ்வாறாயின் உடனடியாக 'காது, மூக்கு, தொண்டை பிரிவில் உரிய சிகிச்சை பெற வேண்டும். இந் நிலையைக் கவனிக்காது விடுவதாலேயே தெளிவாசக் கேட்காத நிலை ஏற்படுகின்றது.

☐ காலை எழுந்தவுடன் தொடர்ச்சியான தும்மலால் துன்புறுகின்றேன். அவ்வேளைகளில் கண்கள் கலங்கி வாசிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றேன். இதனை மாற்ற வழி கூறுங்களேன்.

S. R.

திருமலை

● ● இவ்வாறு தொடர்ச்சியான தும்மல் 'அலர்ஜி' (Allergy) ஆல் ஏற்படுகின்றது. இதற்கு 'அலர்ஜி'க்குரிய காரணியை அறிந்து அதைத் தவிர்த்துக் கொள்வதே சிறந்த வழியாகும்.

காலை வேளைகளில் இவ்வாறு ஏற்படுவதற்கு 'குளிர்' ஒரு காரணமாக அமையலாம். அதிகாலையில் நித்திரைவிட்டு எழுதல், குளிர் காற்று, தண்ணீர், என்பன முகத்தில் படுதலைத் தவிர்த்துக்கொள்வதன் மூலம் இவ்வாறு தொடர்ச்சியான தும்மல் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். இந்நிலை அதிகமாக இருப்பின் 'Priton' பாவிக்கலாம்.

---

''வயது ஆன கிழவனாக இருந்த போதிலும் எனக்கு ஆணும் பெண்ணுமாகக் குடும்பங்கள் அன்பாக வாழ வேண்டும் என்பதில் ஆசை உண்டு, ஏன் என்றால், கணவனும் மனைவியுமாக அன்பாக வாழும் வாழ்க்கை இல்லை என்றால் காட்டில் உள்ளதை விட நாட்டில் கொடுமையான விலங்குத் தன்மை இருக்கும். இந்த நாகரீகம் எதுவும் ஏற்பட்டிருக்காது. காட்டை விட மிகுதியான உறுமல் நாட்டில் இருக்கும். அல்லது உலகத்தில் பாதிப்பேர் பைத்தியக்காரராக இருப்பார்கள். ஆகையால் எப்போதுமே நான் காதல் வாழ்க்கையை ஆதரித்து வருகின்றேன்.''

"நெஞ்சில் ஒரு முள்"

— டாக்டர் மு. வரதராசன் —.

# சிறை

— செயோன்

“பாரன் அந்தப் பிள்ளையை இப்படி போட்டு அடிக்கிறுனே. அவன் சுயநிலைவில் இருந்தால் தானே, யாரும் தடுக்கமாட்டாங்களாமே?'' என்ற மூதாட்டியின் குரலில் இரக்கத்தொனி, வழிப் போக்கரோடு போன எனக்கு சுள் என சுட்டு திருப்பிப் பார்த்தேன்.

அவள் தன் மனைவி என்ற உரிமையோடுதான் அவனை இழுத்து செல்கிறுன். இதில் எப்படி நான் தலையிடுவது என்ற தயக்கத்தோடு அநத மூதாட்டியிடம் சென்றேன்,

''ஆச்சி யாரந்தப் பிள்ளை அவன் மனைவிதானே?''

''எட தம்பி மனைவியாயிருந்தாலென்ன மகளாயிருந்தாலென்ன இப்படி வீதியில் அவன் திட்டுக்கும் அடிக்கும் பொறுமையோடு கேட்க வேண்டும் எண்டா அது அடிமை என்ற எண்ணத்திலதானே நடாத்திருங்கள். இதை யாரும் கேட்கவே கூடாதாப்பா?'' என்ருள் பொல்லாத கோபத்தை தள்ளாத வயதிலும் ஞாயம் கேடடு.

நான் மௌனியாய் நின்றேன். அப்போது, ''என் தம்பி... நீ கூட வருங்காலந்தில இப்படித்தான் செய்வியோ?''

''ஆச்சி, அவன் குடியில செய்யிற எது எண்டு தெரியாமத்தான் இப் படிச் செய்யிறுன் போல.''

''அதுக்கு அந்த அப்பாவிப் பொம் பிளைதான் கிடைச்சாளோ? கண்டதையும் குடிச்சிட்டு திரியிறவனுக்கு எதுக்கடா தம்பி பெண்டிலும் பிள்ளையும்?''

''ஆச்சி உங்களுக்கு தெரிஞ்ச குடும்பமா ஆச்சி அது?''

''எட தம்பி அந்தக் களிசறப் பயலை அப்ப இருந்தே தெரியும். கள்ளத் தேங்காய், ஆடுகளை களவெடுத்து கள்ளுக் குடிச்சுத் திரிஞ்சவன், இப்ப எல்லாம் கஞ்சா, சாராயம் எண்டு புதுசா எல்லாம் குடிச்சு காற்சட்டை போட்டாப் போல மாறிடுவானே? அவன் பாவம், அந்தச் சட்டம்பி வாத்தியாரின்ர மகள், இப்பிடி இந்தக் குடும்பத்தில் வந்து பிள்ளை குட்டியளோட அழியுது பார்'' என்ருள் விசனத்துடன்.

பாடசாலை. வீடு என்று திரிந்த எனக்கு இந்தக் காட்சிகள் புதிதாக இருந்தாலும் உலகிலும் சமுதாய மட்டத்தில் எத்தனையோ அனுபவங்களையும் அறிய வேண்டும் என்ற ஆவல் கொண்டவனுக சமூக பணிகளின் நாட்டம் பலரை சந்திக்க வைத்தது.

ஊரில் இல்லாத காலம் உயர்ந்த சிந்தனையுடன் தலைநகரில் படிப்புக் கென்று காலத்தைப் போக்கிய போது அங்கிருநது, சொந்த ஊரை நினைத்துப் பார்ப்பது உண்டு.

பின்தங்கிய கிராமமாக இருந்தாலும் வீட்டில் சட்ட திட்டங்களும், கட்டுப் பாடுகளும் உள்ளது போல் படிக்க என்று வெளியில் புறப்பட்ட பின் எனக்கு நான் தான் எல்லாவற்றை யும் கட்டுப்படுத்த வேண்டும். அந்த வகையில் வரவுக்கு ஏற்ற வாடகை பணத்தோடு பரீட்சைக் கான செலவு, ரீயூசன் இவற்றுக் கான வரவு செலவுகளை திட்டமிடா விட்டால் அந்த மாதம் திண்டாட் டம் தான். இதனை அநுபவத்தில் கண்ட பின் தான் நான் கூட திட்ட மிட்டேன்.

அந்த ஆரம்ப நினைவுகளை பள்ளி அநுபவங்கள்தான் கற்றுத் தந்தன. அந்த நட்பில் வளர்ந்த எனது நண்பனிடம், எனது அயல் கிரா மத்தில் உள்ள அவன் வீட்டுக்குச் சென்றேன்.

அதுவும் ஒரு கிராமம். ஆனால் சற்று வளர்ச்சி அடைந்து வசதி பெற்று இருப்பது, அங்கு ஓங்கி உயர்ந்த அன்ரனுக்களைக் கண்ட போது தெரிந்தது. அதன் வளர்ச்சி அந்நிய நாட்டின் உழைப்பால் உயர்ந்த இல்லங்களை கண்டபோது கட்டிடங்கள் தான் உயருகின்றதே அதை கட்டியவர் இன்றும் அகதி யாக அயல் நாட்டில் வாழ்வதை எண்ணும் போது கவலைதான் உறுத் தியது.

பள்ளி வாழ்வில் தொடர்ந்த நண் பன் சேகரின் இல்லத்தை அவன் கூறியபடி ஒருவாறு கண்டுபிடித்து சந்தித்த மகிழ்வு, பழைய பல கதைகளை இரை மீட்கவைத்தது, எமக்கு கல்வி கற்பித்த கல்லூரி அதிபர் சட்டநாதரும் இக் கிராமத் தில் வாழ்ந்து மாரடைப்பால் இறந்த தாக சேகர் கூறியதும், எமது வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்த வரின் இல்லம் சென்றுவர ஆவல் கொண்டபோது, அவனே அதிபரின் இல்லம் சென்றுவர அழைத்தான்.

செல்லும் வழியில் நான் கண்டு வந்த அந்த நிகழ்ச்சியை அவனிடம் கூறியபோது அவன்கூட சொன்னான். ''கணேஸ் கட்டிடங்கள் தான் உயருகின்றதே ஒழிய மனித மனங் கள் இன்னும் மரத்துப் போகிறதே பாத்தியா''? என்றான்.

பாடசாலையில் இருப்பது போல் வீட்டிலும் அவரைத் தரிசித்திருந் தால் நேரில் கதைக்க ஏற்படும் தயக்கம் போன்றுதான், அதிபரின் வீட்டில் காலடி வைக்கும்போதும் அவரது கட்டுப்பாடுகள் ஞாபக மூட்டின. பேருக்கு ஏற்றவர்போல் சட்டம்பிக்கு வைத்தார் சட்ட நாதர் என்று, சரியாய்ப் பொருந் தும் அவருக்கு இந்தப்பெயர்.

சேகர் அடிக்கடி செல்வதால் அவனது துணை எனக்கு துணிவை தந்தது. ''கணேஸ் ஏன்ரா பதட் டப்படுறே, சேர் செத்துத்தான் மூன்று வருடமாகி விடடதுவே. இபபோ அவர் வீட்டிற்கு செல்வதில் என்னடா பயம். நான் முன்னரை விட இப்போ அடிக்கடி போவதால் உன்னை அங்கு ஒன்றும் விழுங்கிவிட மாட்டாங்கள்'' என கூறியபோது என்னையறியாதிருந்த பய உணர்வு கலைந்தது.

சேகர் உரிமையுள்ள வீட்டில் நுளைவது போல் உள்ளே சென்முன். அந்த அதிபர் வீட்டிலும் எதோ எதிர்பார்த்த வருகை போன்று பலரும் அறிமுகமானுர்கள். மகள் சுமதி, பாமா, தம்பி மூர்த்தி என அறிமுகம் செய்த தாயார், ''தம்பியை சின்னனிலே கண்டனுன். நடுங்கி நடுங்கி அப்பாவோட கதைக் கிறது எல்லாம் ஞாபகம் இருக்கு'' என்று கூறியபோது மீண்டும் இரை மீட்ட ஞாபகம், அந்த பய உணர்வு மனதில் பதிந்தது,.

''தம்பி, இருங்கோ, கோப்பி கொண்டுவாறன்'' என குசினிக்குள் விரைந்தாள் அதிபரின் மனேவி.

''சேகர் என்ன இரண்டு வாரமா இந்தப்பக்கம் வரவில்லை என்ன புதிய நியூஸ்'' என சுமதி யின் உரிமைக் குரல் நண்பனின் உறவை வலுவூட்டுவதுபோல் :'இப் படித்தான் ஒரு வாரம் தான் வரவில்லை, அதுக்கிடையில் பெருக்கி, பிரித்து சொன்னுல் எப்படி? இதுக்கெல்லாம் அப்பாவின் குட்டு வேண்டி படிச்சாத்தானே மண்டையில் ஏறும்'' என்முன் சேகர்.

''இவரெல்லாம் அப்படி என்முல் தான் படிப்பாரோ?'' என என்னை யும் தங்கள் பேச்சில் இழுத்த சுமதி யின் குறும்பை கேட்டு

''அப்பாவிடம் படித்த நாம் பின் நிற்பதில்லை. பின் வாங்கில் இருந்த வர்கள்தான் அவரின் அடிக்கு பயந்தே பள்ளிக்கு கட் அடிச்சிடு வாங்க.''

''ஓ... அப்ப நீங்களும் ஆமாசாமி கள் மாதிரி அடங்கி ஒடுங்கி நிற் பீங்களாக்கும்'' என்முள்.

''ஏன் எங்களை மட்டும் சொல்லு றியள். முன்பு பள்ளியில் படிக்கும் காலத்தில் உங்கள் குவாட்டசிற்கு வந்தாலும் உங்கள் நிலையும் அப் படித்தானே இருந்தது. எத்தனை நாள் வீட்டில் முழங்காலில் இருக்கக் கண்டிருக்கிறேன்.''

''அது அந்தக்காலம். இப்போ எல்லாம் சரிவருமா?''

''உங்களுக்கொரு அக்கா இருந் தாவே. உங்க அக்காவைப்பற்றி சொல்வேல்லையே? எங்கே இப்போ கம்பசிலா? அல்லது வெளி நாட் டிலா...?''

''அவளா... உங்கள் ஊரில்தான் குடித்தனமாகிவிட்டாள்.''

''எங்கள் ஊரில் உங்கள் அக்காவா?''

''ஓம், உங்கள் கிராமத்தில்தான் குடிகாற குடித்தனம் நடாத்திறு''

''என்ன சொல்லுகிறீர் சுமதி, உங்கள் நிலை என்ன, வளர்ந்த சூழல் என்ன? நான் வரும் ஒவ் வொரு தடவையும் உங்கள் வீட்டை ஒரு கன்னியர்மடம் நடாத்துகிறுர் மாஸ்ரர் எண்டு கதைப்பார்களே, அப்படிப்பட்ட வளர்ப்பில் எப்படி

இந்த மாற்றம்! நம்ப முடியல்லையே''

''நீங்கள் சொன்னீர்களே அந்த வளப்பு என்று, அந்த வளர்ப்பால் ஏற்பட்டதுதான் கணேஸ் இந்த மாற்றம்''

''சேகர் நீ கூட கூறவில்லையே இதை''

''கணேஸ் எனக்கும் இப்போது தான் தெரியுமடா இந்தக் கதையை. ஏன் சுமதி இதை எனக்கு கூட சொல்லவில்லை?''

''இது என்ன பெரிய சாதனையையா சொல்லி மகிழ சேகர், அதை மறைத்துவிட்டோம். அதனுல் அதை மறந்து விட்டோம். அவள் மட்டுமல்ல, அப்பா இருந்திருந்தால் நான் கூட அப்படித்தான் முடிவு எடுத்திருப்பேன். இந்த சிறை வாழ்க்கையில் இருந்து விடுபட...'' எனகண்ணீர்துளிகளை சிதறவிட்டாள்.

''ஊரே போற்றும் மாஸ்ரருக்கு அப்படி என்ன அறிவில்லையெண்டா சொல்லுகிறீர்கள்''

''உங்களுக்கு எட்டு மணித்தியாலத்தில் 2 – 3 மணித்தியால வாழ்க்கையை அவரோடு மசிழ்வாக படிக்க முடியாது சட்டம் போட்டு அடிக்கு பயந்து வாழ்ந்துவிடலாம். ஆனுல் நாம் தினம் — 24 மணி நேர சிறைக்குள் தெரியுமா? வீட்டில் கூட எங்கு செல்வது, என்ன செய்வது, எதை உடுத்துவது என்பதை அவர்தானே திட்டமிடுகிருர். இங்குள்ள மிருகங்களுக்கும் எமக்கும் என்ன வித்தியாசம்? வெளி உலகத்தை அறியாத எங்களுக்கு யாராவது வெளி உறவை காட்ட முனைந்தால் யார்தான் அதைக்காண முயலமாட்டார்கள். இதில் அவளைச் சொல்லி என்ன குற்றம்? இப்பவும் சொல்லுறன் இந்த சூழலைக்கூட சந்தேகமாக எண்ணி தண்டனையும், கட்டுப்பாடு இருந்திருக்கும். ஆதலால் அப்பா இன்று இருந்தாலும் அவளின் முடிவைத்தான் நானும் எடுத்திருப்பன். இது ஊருக்கு தவருகப் படலாம், ஆனுல் எமக்கு இந்த சிறையில் இருந்து விடுபடத்தான் முயன்றிருப்பன்.'' என தன் கண்ணீர் துளிகள் கொட்ட தன் மனக் குமுறலை சொல்லித் தீர்த்தாள்,

''அப்போ நான் கண்ட அந்தக் குடும்பம், உங்கள் சகோதரிதானு? சேகர் நான் வரும் வழியில் சொன்னேனே அந்த குடிமகன் பற்றி...''

சேகர் தலையசைத்தவனுய், ''சுமதி நீர் நினைப்பதுபோல் வீடு சிறையானுல் வெளி உலகம் உங்களுக்கு விடுதலை தரும் என்று மட்டும் எண்ணிவிடலாமா? இன்று அவள் படும் இன்னலை நீர் அறிவீரா?''

''சேகர் உமக்கு புரியவில்லை எமது சூழல், இருட்டுலகில் குருட்டாட்டம் தான் வீட்டினுள் நாம் கண்டது. இன்று நாம் என்ன தவறியாவிட்டோம்? இந்த தவறை காவல் காத்து கட்டிவைத்து காத்

துத்தான் விட்டாரா? அவர் உயிருக்கும் அது உலேவைத்துவிட்டதே. அம்மாவையும் எதையுமே அறியவிடாது யாருடனும் பேச விடாது நல்லது கெட்டதை சமூகத்தில் பழகி அயல், சமூகம் என்பதை அறியாது வெறும் புத்தகப் பூச்சியாக வளர்த்தார். இதனுல் எதிர்பாராமல் விறகுவெட்ட வந்தவன் எங்கள் உறவையும் வெட்டி அழைத்துச் சென்றுவிட்டான். கவரிமானின் நிலேயில் தான் மானம் தாங்காது தன் உயிரையும் விட்டார் பாத்திரா. இன்று நாம்கூட உழைத்துண்ண தினமும் எத்தனே பேரை எமது கந்தோர் வாழ்வில் சந்திக்கின்றேம். எல்லாம் எமக்கு எத்தனே படிப்பினையைத் தருகிறது. நாம் என்ன கெட்டா அழிந்துவிட்டோம்'' என புயலில் சிக்கிய ஓடத்தின் கதை போன்று கூறுகையில், அம்மாவின் தேனீர் பரிமாற்றம் பழைய நினைவுகளுக்கு தரிப்பிடமானது.

''மகள், ரியூசனுக்கு சென்ற பாமாவையும், தம்பியையும் காண ஏல்லே பார்த்து வாவன் பிள்ளே''

''ஏன் அம்மா அவர்கள் வருவார்கள் தானே. வந்தவர்களோடு கதையுங்களேன்.''

''அதுதானே நீ கதைக்கிருய் தானே பிள்ளே''

''அம்மாவின் அடுப்படி வாழ்க்கையை மாற்ற யாரால் முடியும்? குடும்ப ஆரம்ப பாடசாலேயாகவே குடும்ப பெண்களுக்கு கொடுத்து வைத்துவிட்டார்களே'' என்முள் சுமதி.

''என்னத்தில் குறை வைச்சவர் அப்பா, சும்மா இரு பிள்ளே, என்ன இருந்தாலும்......''

''சரி அம்மா சரி கல்லாஞலும் புல்லாஞலும் என வக்காலத்து வேண்டாம...'' சரி, சரி நேரமாகி விடடது நாங்களும் சென்று வர வேணடும். இப்போ நீஙகள் மட்டுமா நாங்களும் அடக்கப்பட்டவர்கள் தான் வீட்டில். அபபடி ஒரு வாழ்க்கை நிலேதான்...... என்று கூறி சென்றபோதுதான் சுமதியும் புரிந்து கொண்டாள் இனறைய சூழலே.

---

## வழிகாட்டுங்கள்

குரங்கு மனம் போன்ற மனிதமனத்தில் ஏற்படுகின்ற இிறல்களே மாற்றி நாம் நல்ல வழியில் செல்ல இந்த ''நான்'' உதவுகின்றது. ''நான்'' மாதம் தோறும் மலர்ந்து பல இடங்களிலும் மணம் கமழ வாழ்த்துகிறேன்.

சாந்தரூபி — ஏரம்பமூர்த்தி
தெல்லிப்பளே

## அறியாமை

அறியாமை என்பது, ஒருவன் அறிய வேண்டிய வற்றை அறியாதிருப்பது அறியாமை எனப்படும் நான் எங்கு செல்கி றேன்?... இதை அறியா லில்லை. இதுவும் அறியாமை தான். ஏனெனில் குறிக் கோள் இல்லாதவன், கடி வாளம் இல்லாத குதிரை யில் பயணம் செய்பவன் போன்றவன்.

நீந்தத் தெரியாதவன் கப்பலிலிருந்து கடலிற்குள் பாய்ந்தால் அவன் நிலை என்னுதும்...? அவ்வாறே அறியாமை இருட்டில் அலை பவனும் ஆகின்றான்.

படி அல்லது படு என் பார்கள் படித்தால் சித்தி யடைவேன். என்று அறிந் தவன் படிக்கிறான் அறியா தவன் படுக்கின்றான். அறி யாமையை நீக்கி, ஆனந்த மாய் வாழ்வோம். அறி வால் அறியாமையை அகற்றிடுவோம்.

அன்புக்குழந்தை
முருங்கன்

## உங்கள் நல்ல நண்பன்

— மாத்தளை கோமஸ்

அறியாமையில் மூழ்கியிருந்த ஆனால், பணம் படைத்தவராயிருந்த ஒருவர் — பிரபு ன்றிஃ போர்டுடண் (Sir Henry Ford) பேசிக் கொண்டிருந்தார். அந்நேரம் —

போர்டு கேட்டார் உங்களின் நல்ல நண் பன் யார்?'' என்று. அப்பொழுது அந்த நண்பர்—

பணக்காரர்கள், புகழ் மிக்கவர்கள் பலரின் பெயர்ப் பட்டியலொன்றை நீட்டி முழங் கினார்.

இடை நிறுத்தினார் போர்ட்டு. ''இல்லை, இல்லை – உங்களின் நல்ல நண்பர் யாரென்று நான் கூறுகிறேன் ''என்று சொல்லி விட்டு, தன் கையிலிருநது பென்சிலால் மேசை விரிப்பில் இவ்வாறு எழுதினார்;

''உங்களுக்குள் இருக்கும் நல்லவை களை வெளியே கொணர்கின்றவர் எவரோ, அவரே உங்கள் நல்ல நண்பர்''

ஆமாம் — அதாவது நம் அறியாமையைப் போக்கி–நல்லவைகளை வெளிக் கொணர்ந்து இதயத்தில் அறிவொளியை ஏற்றுபவர்தான் நல்ல நண்பர்!

---

ஆசிரியர்: ஏறத் தெரியும் இறங்கத் தெரியாது அது என்ன?

மாணவன்: நம்மநாட்டு விலைவாசி சேர்.

ஆசிரியர்: .........?

# அறியாமை

## அழிந்திட ......

— ஏ. ஆர். எம். ஜமால்தீன்
புழுதிவயல்

நண்பா!
உன்
ஆற்றல்கள் வெளிவரட்டும்!
நவீன மயமாக்கல்
என
நீ போலி நாகரிகத்தில்
சிறை படடதால்
உன்
சமுதாயத்தின்
சிரசுகள்
சற்றேனும் உயர்ந்து விட்டனவா?
மேற்கத்தைய பாணிகள்
உயருலகக் கொள்கைகள்
என
நீ அயலவரிடம்
இரவல் பெற்ற கொள்கைகளால்
உன் சமுதாயந்தானே.
இழிநிலைக்குத்தள்ளப்பட்டது

நண்பா!
உன் ஆற்றல்கள் வெளிவரட்டும்
பாரம் பரியங்கள்
பண்பாட்டுக் கொள்கைகள் என
பண்டைய கொள்கைகளை
நீ
பற்றிப்பிடித்துக் கொண்டிருந்தால்
உன் சமுதாயத்தில்
உள ஆளுமையில் எழுந்த
உயரிய அறிவு நிறை
எழுச்சியை எபபோது காண்பது?

நண்பா!
உன்
ஆற்றல்கள் வெளிவரட்டும்
நாளை
நம் சமுதாயம்
சிந்தனையில் சிறந்து
சிரசுயர்த்தி, நிற்கும்
சமுதாயமாக உருவாக
உன்
ஆற்றல்கள் வெளிவரட்டும்

---

## இளவாலையில் "நான்" கருத்தரங்கு

இளவாலையில் உள்ள திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலையில், 12-01-89 அன்று அப்பாடசாலை அதிபரின் உதவியுடன் அங்குள்ள உயர்தர மாணவர்களுக்கு "நான்" உளவியல் மஞ்சரிக்கான அறிமுகமும், அதன் வளர்ச்சியும் பற்றிய கருத்துரைகள் சகோதரர்கள் துஷ்யந்தன், யூஜின் ஆகியோரால் நடாத்தப்பட்டது. இவர்களுக்கு அப்பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும், அப்பங்கு மக்களும் சிறப்பாக செல்வன் சத்தியானந்தனும் உதவினார்கள். இவர்கள் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- இளவாலை நான் வட்டம்
  பொறுப்பாளர்: M. தேவப்பிரகாசம்

- ஆனைக்கோட்டை நான் வட்டம்
  பொறுப்பாளர்: வனஜா, மரியாகொறற்றி, இமெல்டா

# சிந்திக்கவும் செயலாற்றவும்

T. M. அன்ரனிப்பிள்ளை. L L B.

எது? ஏன்? எப்படி? என்பவை சிறிய வினக்களே! ஆயினும், இவை போன்ற வினக்களுக்கு விடை தேட முற்பட்டதின் காரணமாகவேதான உலகில் பல அறிஞர்களும், விஞ்ஞானிகளும், தத்துவ மேதைகளும் உருவாகினர்கள் என்பது வரலாறு கண்ட உண்மை!

அவர்கள அக்கறையுடன் செயற்பட்டார்கள; உயர்வு பெற்றுர்கள்.

அவர்களைப் போன்று நீரும் உயர்வு பெற விரும்புகின்றீரா?

பின்வரும் செயல் முறைகள் பயனுள்ளவை:

1. உமது இயற்கையான ஆற்றல்களை இனம் கண்டுகொள்ளும்.
2. உமக்கு விருப்பமான துறையைத் தெரிந்துகொள்ளும்.
3. நியாயமானதும், நீ பின்பற்றக் கூடியதுமான ஓா செயல் முறையைத் தயாரியும்.
4. வசதிக்கேற்ப உமது செயற்திறனை அதிகரிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தும்.
5. உமது இலக்கை மனதில் பதித்து வைத்து அதற்கேற்ப தினமும் சிறிதேனும் முன்னேற முயன்று பாரும் — பயன்கிடைக்கும்!

---

## எயிட்ஸ் - கருத்தரங்கு

தமிழ் மொழியிலான எயிடஸ் – கல்வி கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர், உடனடியாக,

"பயிற்சி பிரதி பணிப்பாளர்"
இலங்கை குடும்பத்திட்ட சங்கம்,
த, பெ. எண். 365,
37 / 27, புல்லர்ஸ் ஒழுங்கை,
கொழும்பு 7.

என்ற விலாசத்தோடு தொடர்பு கொள்ளலாம்.

பயிற்சி கருத்தரங்கு அரைநாள் நிகழ்ச்சியாக வார நாளில் அல்லது சனிக்கிழமைகளில் நடத்த ஏற்பாடு செய்யப்படும். பங்குபற்ற விரும்புவோர் உமக்கு வசதி நாளை (வார நாள் / சனிக்கிழமை) குறிப்பிட்டு எழுதலாம்.

"சீ! நீ ஒரு பெண் அல்ல, பேய். உன்ர முகத்தில முழிக்கிறதே பாவம்."

"ஆமா ஆறுமாதத்துக்கு முன்னால என்ர கண்ணே, முத்தே, மணியே என்று என் பின்னால சுற்றினதை மறந்திட்டீங்களே? உங்களைக் கட்டி நான் என்ன சுகம் கண்டேன்? தொழில், தொழில் என்று திரியிறீங்க பின்னர் குடி, குடி என்று வெறியில் கிடக்கிறீங்க."

"எல்லாத்துக்கும் நீ தாண்டி காரணம். முந்தி இருந்திட்டுதான் குடிச்சன். இப்ப ஒரு நேரத்திற்காவது குடிக்காம என்னால இருக்க முடியல்லையே. உன்ர சந்தேகப் பேயால என்ர சந்தோஷத்தைத் துரத்தின. உன்ர பிடிவாதத்தால என்ர தன்மானததுக்கு சோதனை தந்த, உன்னைப் போன்ற பத்தினிப் பெண்களாலதான் இன்று பல ஆண்கள் குட்டிச் சுவராகி விட்டாங்க."

"எனக்கு நீங்க மட்டும்தான் வேண்டும். நீங்கதான் எனக்கு எலலாம், எந்த ஒரு பெண்ணும் தன் கணவன் தூய்மையானவராக, குடிவெறியில்லாதவராக இருக்க வேண்டும் எனத்தான் எதிர்பார்ப்பாள். அதைத்தான் நானும் எதிர்பார்த்தன். ஆனா நீங்க இப்ப முழு நேரக் குடிகாரனாக மாறீட்டீங்க".

"நீ பெரிய சுயநலக்காரி, உனக்கு முன்னாலும் பின்னாலும் நான் எப்பவும் திரிய வேண்டும் என்று எதிர்பார்த்த, உன்னோட மட்டும் தான் நான் பேச வேண்டும், மற்றவர்களோடு கொஞ்சம் சரளமாக கதைச்சுட்டா, உன்ர முகம் நீண்டுவிடும் உன்ர பிடிவாதத்தால என்னை முழுசா இழந்திட்டாயே பார்த்தாயா?

என்ர கவலைக்குக் காரணமான உன்னை இனி நான் தொடமாட்டன். எனக்கு ஏமாற்றம் தராத இது வேண்டும். அதுதான் மது."

இன்று பல மனித உள்ளங்கள் பிரிவு பட்டுக் காணப்படுகின்றன. திருமண வாழ்க்கை சிறைவாசமாக மோசம் போய் விட்டது. இருதுருவங்களாக பல்வேறு அம்சங்களில் பிளவு பட்டு கணவனும் மனைவியும் காணப்படுகின்றார்கள்.

ஒருவரை ஒருவர் விளங்கிக் கொள்வது அன்றேல் புரிந்து கொள்வது என்பது அவர்களால் முடியாத ஒன்றாக மாறிவிட்டது. ஆரம்ப காலத்தில் இருவரும் ஒருவர் ஒருவரால் கவரப்பட்டார்கள். காரணம் அவர்கள் தத்தம் நல்ல பகுதியினை, ஆளுமையின் சுவையான அம்சத்தினை அவதானித்தார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் தத்தம் வெறுமையான பகுதியினை, ஆளுமையின் பலவீனமான பக்கத்தினை மட்டுமே பார்க்கின்றார்கள். எனவே, அவர்களால் ஒன்று சேர முடியாது; ஒருவர் ஒருவரது உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாது.

சமூகவியல் உளவியலாளர் ஒருவர் பின்வருமாறு கூறுகின்றார்;

"ஆணையும் பெண்ணையும் ஒரே இயல்பு நிலையில் வைத்து ஒருக்காலும் பேச முடியாது.

இருவரும் ஒருவருக்கொருவர் நிகர் அல்லர். ஏனெனில் ஆண்களும் பெண்களும் தம் உடலின் ஒவ்வொரு அணுவிலும் வேறுபடுகிறார்கள். ஒருவர் உடற்கூறு மற்றவரது உடல் அமைப்பை பூர்த்தி செய்வதாக உள்ளது. ஒருவர் மற்றவரைச் சார்ந்திருக்க வேண்டும். என்பது இயற்கை நியதி, ஆண், பெண் இன அடிப்படை வேறுபாடுகளைக் கவனியாது இருப்பதே குடும்ப வாழ்க்கை தோல்வியடைவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும்."

ஆண் — ஒரு பார்வை

ஆண் — உடலிற்கு முக்கியத்துவம் கொடுப்பவன்
— இலகுவில் உணர்ச்சியை வெளிப்படுத்துபவன்
— விரைவில் ஆசைகளை நிறைவு செய்பவன்
— மனதில் வைராக்கியம் இல்லாதவன்
— கடுமையும் அடக்குமுறைக் குணமும் உடையவன்
— விருந்தோம்பும் ஆற்றலும் வள்ளல் தன்மையும் உடையவன்
— உடற்பலம் கூடியவன்
— எதிலும் பொது நோக்கும் பரவலான மேற்பார்வையும் போதுமென்று நினைப்பவன்.

பெண் — ஒரு பார்வை

பெண் — உணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பவள்
— தாமதித்தே உணர்வூட்டம் பெறுபவள்
— மனவைராக்கியமும் சகிப்புத் தன்மையும் கூடியவள்
— தான் அன்பு செய்யப்பட வேண்டும் என்பதை மையப்படுத்துபவள்

— சுயநலம், பழிவாங்கும் இயல்பு கூடியவள்.
— உளபபலம் கூடியவள்
— நடைமுறைக்கு ஏதுவான முடிவுகளை இலகுவில் எடுப்பவள்.
— எதனையும் உன்னிப்பாகக் கவனித்து அதனை ஆழமாக தெரிந்து கொள்ள ஆசிபபவள்.

ஆண் — பெண்

பொதுவாக ஆண் பெண் இரு பாலரிடையேயும் மேற்படி கூறியவாறு வேறுபாடுகள் காணப்படடாலும் இவற்றை அறுதியானவை எனக்கூற முடியாது. வேற்றுமைப்பாடுகளின் விகிதாசாரங்கள் ஆளுக்கு ஆள் மாறுபடடுக் காணப்படலாம்

ஆண் தன்மை கொண்ட பெண்களையும் பெண் தன்மை கூடிய ஆண் களையும் சந்தித்திருக்கலாம். இவர்கள் விதிவிலக்கானவர்கள். எனினும் சாதாரணமான முறையில் ஆணின் ஆளுமை இபபடித்தான் இருக்க வேண்டும், பெண்ணின் ஆளுமை இப்படித்தானிருக்க வேண்டுமென வகைப்படுத்துதல் முறையன்று அவள் ஆம்பிளை மாதிரி பேசுகின்றாள், ஆம்பிளை மாதிரி நிமிர்ந்து நடக்கிறாள் எனச் சுட்டுவது சமூக மரபு காரணமாக எழுந்த கூற்றேயாகும்.

உள இயைபு

எதிர்பாராமலோ அன்றேல் திட்டமிட்டோ இருவர் திருமணத்தில் இணைகின்றார்கள். இருவரும் பல் வேறு அம்சங்களில் உடல்ரீதியாக, உளரீதியாக, உணர்வுரீதியாக, செயற்பாட்டுரீதியாக வேறுபட்டவர்கள் எனபதை அறிந்து கொள்கின்றார்கள். இத்தகைய வேறு பாடுகளும் ஒருவர் ஒருவரில்காணும குணநலன்களும் ஒருவரை ஒருவர் நிறைவு செய்வதாய் அமையவேண்டும் என்பதே இல்வாழ்வின் சிறப்பாகும். ஒருவர் ஒருவரிலுள்ளகுறைகளைப் பெரிதுபடுத்துவதை விடுத்து ஒருவர் ஒருவரது தேவையை நிறைவு செய்து வாழ முற்பட வேண்டும்.

ஒருவர் ஒருவரை விளங்கிக் கொள்வது அன்றேல் புரிந்து கொள்வது என்பது இருவரிடையேயும் நிலவுகின்ற மன ஒன்றிப்பையே பொறுத்தது. காலம் பூராவும் ஒருவரை ஒருவர் பார்த்து மகிழ்ந்திருப்போம் என்பவர்கள் ஒருவர் ஒருவரது முகத்தைப் பார்ப்பதையே வெறுக்கிறார்கள் எனறால் காரணம் அவர்களிடையே காணப்படும் மனவிரிசலேயாகும்.

ஒருவர் ஒருவரைப் பாராட்டிக் கொள்ளுதல், ஒருவர் ஒருவருக்கு உற்சாகம் ஊடடுதல், ஒருவர் ஒருவரது இயல்பான நல்ல தன்மைகளின் வளர்ச்சிக்கு உரமிடுதல், ஒருவர் ஒருவரது ஈடுபாடுகளில் ஆர்வத் தோடு ஒத்துழைப்பு நல்குதல் போன்றனவற்றில் ஊக்கம் காட்டுதல் நல்ல உறவிற்கு வழி வகுக்கும்.

# அறியாமை - ஓர் அறவியல் கண்ணோட்டம்

— வோ. வ. இராயப்பு மா. ம. தி. இறையியல் கலாநிதி.

இப்பூமியில் பிறக்கும் மக்களனைவரும் பல்கலைகளிலும் தேர்ந்த மேதைகளாவதில்லை. அவர்களுள் பெரும்பாலானோர் சாதாரண அறிவுடையவர்களே. மனித அறிவு படிப்படியாகவே வளர்ச்சியடைகிறது. மக்கள் வயதில் வளரவளரத்தான் அவர்களது அறிவும் வளர்கிறது, ஆரம்ப வகுப்பில் கல்விபயிலும் ஒரு குழநதைக்குப் பெருக்கல் வாய்பாடு தெரியாதென்பதால் அக்குழந்தை அறியாமையால பீடிக்கப் பட்டிருக்கிறதெனக் கூற முடியுமா? அல்லது கல்லூரியொன்றில் படித்துக் கொண்டிருக்கும் மாணவனைப்பாரத்து அவனுக்கு மருத்துவத்தைப் பற்றி அறியாமைஉண்டு என்று அவனைக் குறை கூறினோமாகில் அது நமது அறியாமையை வெளிப்படுததுமேயன்றி அம்மாணவனுக்கு அறியாமை உண்டென்பதைக் குறிக்காது.

அறிவின்மைக்கும் அறியாமைக்குமிடையில் உண்மையில் வேறுபாடுண்டு எனபதை நாம் சாதாரணமாகப் புரிந்து சொள்வதில்லை. அறிவின்மை (Nescience, not krnowing) என்றால் ஒன்றைப் பற்றி அறிவு இல்லாமையே, மேற் கூறப்பட்ட கல்லூரி மாணவனுக்கு மருத்துவத்தைப் பற்றி அறிவு இல்லாமையை அறிவின்மை அல்லது தெரியாமை எனக்கூறுவது தான் சாலத்தகும். மாறாக அறியக் கூடியதும் அறிய வேண்டியதையும் அறியாதிருப்பதே அறியாமை. உதாரணமாக ஒரு மருததுவக் கலாநிதியாவதற்கு மருத்துவக் கல்லூரியில் அல்லது பல்கலைக் கழகத்தில் பயிலும் ஒரு மாணவிக்கு மருத்துவம் பற்றிப் போதிய அறிவு இலலாவிடில் அதையே உண்மையில் அறியாமை என்று கூற வேண்டும்.

மனிதன் பொறுப்புடன் செயலாற்ற வேண்டியவன். அவ்வாறாகில் அறியாமையால் செயல்படும் ஒவ்வொரு செயலுக்கும் நாம் பொறுப்புள்ளவர்களா? அதற்கு நாம் குற்றவாளிகளா என்பதைப் பற்றிச் சிறிது ஆராய்வதே இவ் அறவியல் கண்ணோட்டத்தின் நோக்கம்.

எந்த ஒரு செயலுக்கும் நாம் பொறுப்புள்ளவர்களென்றால் அது ஒரு மனித செயலாக (Human act) இருக்க வேண்டும். நாம்செய்யும் செயல்கள் அனைத்தும மனித செயல்களல்ல. அறவியலின்படி மனிதனின் செயலுக்கும் (act of man) மனித செயலுக்கும் இடையில் வேறுபாடுண்டு. மனிதனின் செயலென்றால், மனிதன் ஏனைய பிராணிகளைப்

போன்று. தன்னுரிமையைப் பாவிக்காது. இயல் பூக்கத்தினுல் அதாவது தன் உள்ளுணர்ச்சியினுல் உந்தப்பட்டுச் செய்யும் செயல். உ + மாக— குறித்த நேரத்துக்கு உணவருந்துதல். சுவாசித்தல், தும்முதல் முதலியன. ஒரு பூனையும் சாப்பாட்டு நேரம் வந்தவுடன் மேசையண்டை வந்து சாப்பிடும், மாருக மனித செயல் என்ருல் மனிதன் சுதந்திரமாக, தானுகவே விரும்பி, போதிய அறிவு அவதானத்துடன் தன் சம்மதத்துடன் ஆற்றும் செயலே. எனவே மனித செயல் என்றல் மனிதனுக்கும் மிருகத்துக்கும் பொதுவான செயலாக அமையாது மனிதனுக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் சிறப்பாக அமையக் கூடியசெயலே. விலங்குகளால் இத்தகைய செயல்களை ஆற்ற முடியாது. மனித செயலுக்குச் சுதந்திரம இன்றியமையாதது. மனிதனுல் மட்டும் சுதநதிரமாக மனித செயல்களைச் செய்யமுடியும்.

எனவே மனிதன் அறியாமல் செய்யும் அனைத்துச் செயல்களுக்கும் அவன் பொறுப்பாளி அல்லது குற்றவாளி எனக் கூற முடியாது. அறியாமை பல தரப்பட்டது. நாம் ஒரு செயலை ஆற்றும் பொழுது அறியாமையுடன் ஆனுல் அறியாமை காரணமாகவன்று சில வேளைகளில் செயல்படுகிருேம். உதாரணமாக நான் வேட்டைக்குச் செல்கிறேன். காட்டில் தொலைவில் ஏதோவொன்று தெரிகிறது. அதை ஒரு மிருகமென எண்ணி வெடிவைககிறேன். அருகில் சென்று பார்த்த பின் தான் நான் சுட்டது ஒரு மனிதனென்பதை அறிகிறேன். இது அறியாமையுடன் செய்யப்பட்ட ஒரு செயல். இத்தகைய அறியாமைக்கு நான் குற்றவாளி இல்லை. இது கவனயீனமாக நிகழ்ந்ததென்பது உண்மை. போதியளவு கவனம் செலுத்தாததற்கு நான் பொறுப்பாளி. ஆனுல் நான் சுடுவது ஒரு மனிதன் என அறியாதிருந்ததற்கு நான் பொறுப்பென என்னைக் குற்றம் சாட்ட முடியாது. காரணம் நான் வேண்டுமென்று, சுதந்திரமாக அம் மனிதனைச் சுட்டுக் கொல்லவில்லை.

மாருக ஒரு செயலை நாம் அறியாமையினுல் அதாவது அறியாமை காரணமாகச் செய்யும் பொழுது அறிவு அவதானத்துடன் வேண்டுமென்று, சுதந்திரமாக அதைச் செய்கிருேம். இததகைய அறியாமை குற்றமுள்ள அறியாமை என அழைக்கப்படுகிறது இதுவும் இருதரப்பட்டது, ஒன்று தண்டனையிலிருந்து தப்பலாமென்று. அறிய வேண்டிய ஒரு விடயத்தை நேரடியாக விரும்பி அறியாமலிருப்பது. உதாரணமாக, கல்லூரியின் விளம்பரப் பலகையில் மாணவர் அனைவரும் ஒரு குறித்த நேரத்தில் கூட்டத்திற்குச் சமூகம் அளிக்க வேண்டுமென்று ஒரு அறிவித்தல் போடப்பட்டுள்ளது. அக் கூட்டம் பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லித் தண்டனையிலிருந்து தப்பலாமென ஒரு மாணவன் அவ்வறிவித்தலை வாசியாதிருந்தால், அது ஒரு குற்றமுள்ள

அறியாமை. மற்றது அறிய வேண்டிய ஒன்றை மறை முகமாக அறியாதிருத்தல் அதை அறியாமலிருப்பதன்று ஒருவரின் விருப்பம். ஆனால் அதை அறிவதில் கவனம் செலுத்துவதில்லை. உதாரணமாக ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயிலும் ஒரு பெண், படிப்பித்தல் முறைகளைப்பற்றி அறியத்தவறினால், அவற்றில் கவனம் செலுத்தாவிடில், அதைமறை முகமாக விரும்பும் அறியாமை எனலாம். அவற்றைப் பற்றியறிய அப்பெண் நேரடியாக விரும்பாமலில்லை. ஆனால் தனது அசட்டை காரணமாக படிப்பிதத்ல் முறைகளைப் பற்றி மறைமுகமாக அறியாதிருக்கிறாள் இந்த இருதரப்பட்ட அறியாமைககும் நாம் பொறுப்பாளிகள், குற்றவாளிகள்.

இன்னொரு வகையான அறியாமையுமுண்டு, அதை மேற் கொள்ள முடியாத அறியாமை என்றழைப்பர். அறியாமை காரணமாக ஒரு செயல் ஆற்றப்படுகிறது. ஆனால் அவ்வறியாமை மேற் கொள்ளக்கூடிய தொன்றன்று. உதாரணமாக மதுபானம் அருந்தாத ஒருவர் அருந்தும் குளிர்பானத்தில் அவரை அறியாமல் மதுபானம் கலக்கப்படுகிறது. அவர் அதை அருந்தி வெறிகொண்டால் அதை மேற்கொள்ள முடியாத அறியாமை எனலாம். செயற்படு முன் அவருக்கு அது பற்றி அறியாமையுண்டு. ஆனால் அவர் அருந்தும் பானம் வெறிவரச் செய்யுமென்று அறிந்திருந்தால் அதை அவர் அருந்தியிருக்க மாட்டார். இத்தகைய அறியாமைக்கு ஒருவர் பொறுப்பு ஏற்க முடியாது. அதற்காக அவரில் குற்றம் சாட்டவும் முடியாது.

எனவே அறியக்கூடியதும் அறிய வேண்டியதுமான ஒன்றை அறியதிருப்பதே உண்மையில் அறியாமையென்றாலும் அனைத்து அறியாமைக்கும் நம் குற்றவாளிகளல்ல. அறிவு அவதானத்துடன், வேண்டுமென்று சுதந்திரமாக ஒரு செயலை அறியாமை காரணமாக ஆற்றும் பொழுது தான் அதற்கு நாம் பொறுப்பேற்கமுடியும். இத்தகைய அறியாமைக்குத்தான் நாம் குற்றவாளிகள்.

---

★ அறிய வேண்டியதொன்று அல்லது தெரிய வேண்டியதொன்று தெரியாமல் இருப்பது அறியாமை. தனக்கு எலலாம் தெரியும் என்று சொல்பவன் சுத்த முட்டாள்.

★ நாம் விரும்பி நேசிக்கின்ற எதுவுமே அழகாகத்தான் இருக்கும்.

---

# சுமை தாங்கி



÷ + ÷     ÷ + ÷

ஸ்ரனி அன்ரனி

☐ சுமை: நான் ஓர் இளைஞன். இன்றைய எமது பிரச்சினைகளால் ஒரு விரக்தி நிலைக்கு தள்ளப்பட்டு வெளியில் சுதந்திரமாக திரியவும் முடியாது வாழ்க்கையே வெறுத்து விட்டது. தற்கொலை செய்து கொள்ள கூட நினைத்தேன் என்ன செய்வதென்றே தெரியவில்லை

ரவிகுமார்
கரவெட்டி

● தாங்கி: டியர் ரவி. தற்கொலை ஒரு கோழையின் செயல். வாழ்க்கையில் பலகஷ்டங்கள் தோல்விகள் சோதனைகள், ஏமாற்றங்கள் வருவது சகஜம் தானே. இதற்காக மனம உடைந்து வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளிவைக்க முயல்வதும், இயற்கையான தொன்றே. மனிதன் அறிவால் வளரவும், உள்ளத்தால் அன்பைப்பரப்பி, பிறருக்கு உதவியாக இருக்கவும் தான வாழ்க்கை தரப்பட்டிருக்கிறது "நாம் ஒவ்வொருவரும் ஒரு காரணத்திற்காக பிறந்திருக்கிறோம்." என்பதை திடமாக நம்பி வாழ்வை நடுவில் பறித்து விடாதீர்கள். சில சூழ்நிலைகள் உங்கள் சக்திக்கு அப்பாற்பட்டவை என்பதை மனதில் ஆழமாக பதியுங்கள். கஷ்டங்களையும், துன்பங்களையும், தோல்விகளையும் எதிர் கொள்ளக்கூடிய உறுதியும் துடிப்பும், உங்களிடம் உண்டு என்பதை நம்புங்கள். இருள் உலகின் நியதியல்ல ஒளிதான் நியதி. ஆகவே ஒளி உங்கள் வாழ்க்கையில் பிறக்க நம்பிக்கையுடன் வாழ முயலுங்கள்.

☐ சுமை: நான் ஒருவரை இரண்டு வருடங்களாக காதலித்து வருகிறேன். அவரோ என்னைவிட வயதில் 8 வயது இளையவர். அவரை பிரிந்து வாழ என்றால் முடியாது. எனது காதல் நிறைவேறுமா. உங்கள் பதில் எதிர்பார்க்கிறேன்.

ரஞ்சனி
மன்னார்.

● தாங்கி: டியர் ரஞ்சி உங்கள் காதலர் வயதில் இளையவராயிருந்தும் அவரை காதலிப்பதாகக் கூறுகின்றீர்கள. உங்கள் காதலரும் உங்களுடைய நிலையில் இருக்கிறாரா என்பதை நிச்சயபபடுத்திக் கொள்

ளுங்கள். சில வேளைகளில் நீண்ட வயது வேறுபாடுகள் திருமண வாழ்வில் ஒருவரையொருவர் புரிந்து வாழத்தடையாக அமைய லாம். ஆனால் உங்கள் இருவருக்கு மிடையில் உண்மையான ஆழ மான புரிந்துணர்வும், அன்பும் நிலவுமாயின் திருமணத்தில் அது கைகூடலாம், உங்கள் திருமண வாழ்வில் இத்தகைய வயது வேறு பாட்டை பிறர் விமர்சிக்கும் போது அதனை ஏற்று வாழக்கூடிய மனபபக்குவமும் உங்களிடம் இருக்க வேண்டும். உங்கள் காதலர் மிகவும் இளவயதுடையவரென் றாலும் அவர் திருமண வாழ்வின் பொறுப்புக்களை உணர்ந்த ஒரு மனப் பக்குவம் இருக்கின்றதா என் பதையும் தீர்மானம் எடுக்குமுன் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இத்தகைய வயது வேறுபாடு உங்கள் உள்ளத்தில் ஒரு குறையாக சுமையாக வளரவிடாதீர்கள்.

☐ சுமை: நான் A/L படிக்கும் ஒரு மாணவன். பெண் ஒருத்தியுடன் சகோதரி முறை யில் தான் பழகினேன். அவளோ என்னை காதலிப்பதாகக் கூறுகின் றாள். தன்னுடைய காதலை ஏற்கா விட்டால் தற்கொலை செய்யப் போவ தாகவும் பயமுறுத்துகின்றாள். ஆனால் எனக்கோ அவளுடைய காதலை ஏற்க முடியவில்லை. ஒரே குழப்பமாக இருக்கின்றது

தே. இல்மன்
பேசாலை

● தாங்கி: அன்பின் இல். நீங்கள் சகோதரி முறையில்தான் உங்கள் நண்பியுடன் பழகியதாகக் கூறு கின்றீர்கள். நண்பியிடம் விளங் கிய சில நல்ல பண்புகளால் கவரப்பட்டு நட்பை நீங்கள் வளர்த் திருக்கலாம். ஆனால் அவற்றுக்காக உங்களிடம் காதலை, திணிபபது தவ றான முடிவாகும். அவளும் உங்க ளுடன் நட்பை வளர்த்தபோது உங்களுடனேயே வாழ்வில் இணைய வேண்டும் என்ற நோக்கில் பழகி யிருக்கலாம், இருவேறு நிலைகளில் உறவு வளர்ந்தமையால் இத்த கைய குழப்பமான நிலை ஏற்பட் டுள்ளது. எனவே நேரடியாக நண் பியிடம் உங்கள் நிலையை எடுத்துச் சொல்லுங்கள். நட்பு அடிப்படை யில் பழகியதற்காக அவள் காதலை ஏற்றுத்தான் தீரவேண்டும் என்று நிர்ப்பந்திப்பது நண்பியைப் பொறுத்த மட்டில் தவறான தீர் மானமாகும். நீங்கள் அவளுடைய காதலை ஏற்காததால் ஏறபடும் விளைவுகளுக்கு உங்களை யாரும் பொறுப்பாகக முடியாது நட்பு வேறு, திருணத்தில் இணைவது வேறு என்ற நிலைப்பாட்டை உறுதி யாக நண்பியிடம் எடுததுச் சொல்லுங்கள்.

☐ சுமை; எனக்கு பிறருடன் அடிக்கடி கருத்து வேறுபாடு ஏற் படுகின்றது. பிறருடன் ஒத்துப்போக முடியவில்லை. அவர்களுடைய குறை களையே அதிகமாக பார்க்கின்றேன்

இதிலிருந்து விடுபட வழி கூற முடியுமா?

ராஜ் மோகன்
சாவகச்சேரி

● தாங்கி: டியர் ராஜ். பழகுவது என்பது ஒருகலே. மனிதர்கள் அறிவினுல், நியாயத்தினுல், தர்க்க வாதத்தினுல் ஆளப்படுவதில்லே. அதிகமாக உணர்ச்சிகளாலேயே ஆளப்படுகிருர்கள். நமக்கு நம்மைபபற்றி தன்னம்பிக்கை இல்லாத போது பிறரிடம் குறை கண்டு அவர்களே சிறியவர்களாக்கி விடுவதுண்டு. உங்கள் தவறுகளே உடனேயே ஏற்று பிறரை நேரிடையாக மறுத்துப், பேசாதீர்கள். பிறர் கூறுவது தவருனுலும் அவர்கள் கொள்வத்துடன் தப்ப கொஞ்சம் வழி கொடுத்து பேசுங்கள், பிறரது குறைகளே காண்பதற்கு பதில் அவர்கள் செய்யும் நல்ல காரியங்களுக்காக பாராட்டுங்கள். மனதார கொஞ்சம் அதிகப்படியாகப் போய் பிறருக்கு உதவுங்கள். பிறர் உள்ளததை தொக்கூடிய சிறு உதவிகளே நன்றி எதிர்பாராமல் செய்புங்கள். ஒரு அறிஞனின் கூற்று இதோ: பிறர் உணர்ச்சியை புண்படுத்துமாறு பேசுவதை நிறுத்திக் கொண்டேன்., பிறரை தேரிடையாக மறுத்துப் பேசுவதை நிறுத்திக் கொண்டேன். இதுவே நான் கறற பாடம்''

☐ சுமை: நான் ஒரு இளேஞனே பல வருடங்களாக அன்பு செய்து வருகின்றேன். எங்களுடைய அன்பு ஆழமானது காதலர்கள் பரிமாறும் அன்பைவிட மேலான அன்போடு பழகுகிரேம். இப்படியாக இருக்கும் நாம் வாழ்வில் இணைந்து வாழ விரும்புகின்றேம் இதற்கு உங்கள் ஆலோசனே என்ன?

இ. செல்வி
யாழ்ப்பாணம்

● தாங்கி: டியர் செல்வி. உங்கள் கேள்வியே பதிலாக அமைகின்றது பெரும்பாலும் மனித உணர்வுகள் அனேத்தும விருப்பு என்னும் நிலேயில் ஆரம்பிதது நட்பாகி, காதலாகி அன்பிலே நிறைவேறுகின்றது. எனவே உங்களுடைய உறவும் இத்தகைய அடிபபடையில் அமைந்திருந்தால் நீங்கள் திருமண வாழ்வில் இணைய எடுத்த தீர்மானம் சரியானதாகும். காதல் ஒரு புனிதமான உணர்வு. ஆனுல் சிலவைப் பொறுத்த மட்டில் உணர்வு நிலேயில் முடிவடைவதால் அன்பிலே நிறைவேறுவதில்லே. வெறும் உணர்வு நிலேயில் ஒருவர் மீது ஒருவருக்கு ஏற்படும் விருப்பை பொறுத்து அது அன்பிலே ஆழம் என்று தீர்மானித்து விடாதீர்கள். உண்மையான அன்பிலே புரிந்துணர்வும், தியாகமும், நல்லெண்ணமும் நிறைந்திருக்கும். உறவுகளிலே அன்பு ஒரு தொடர்ச்சியான (Process) செயற்பாடாகும் என்பதை உணர்ந்துள்ளீர்கள் போல் தெரிகின்றது. விரைவில் கெட்டிமேளம் கேட்க எனதுவாழ்த்துக்கள். ●

# கருத்துக் குவியல் 58



## காதல் கண்டிக்கப்பட வேண்டியதா?

**கண்டிக்கப்பட வேண்டியது** *1.*

**20-ம்** நூற்றுண்டின் இறுதிக் கட்டத்தில் சென்றுகொண்டிருக்கும் இன்றைய உலகில் ''காதல்'' என்ற சொல் நாம் அன்றுடம் கேட்டு இருக்கும் ஒரு பரீட்சயமான சொல்லாகும். காதல் என்ற போர்வையில் இன்று பல காமக் களியாட்டங்கள் நடக்கின்றன. அது மட்டுமன்று சில ஒழுக்கங் கெட்ட காதல்களால் மாற்ற முடியாத பயங்கர நோய்கள் கூட உலாவுகின்றது. இப்படிப்பட்ட காதல்கள் நிச்சயம் கண்டிக்கப்படவேண்டும்.

மேலும் பெரியவர், சிறியவர், வயது, கட்டுப்பாடு இவற்றை யெல்லாம் கடந்த காதல்களும் உண்டு. இன்று கல்வி பயிலும் மாணவர்கள் கூட இதை ஓர் பாடமாக, நாகரீகமாக, ஏன் முழு வேலையாகவே கொள்கின்றுர்கள். படிப்பதைப் பொழுது போக்காகக் கொண்டு தமது எதிர் காலத்தைப் பாழாக்குகின்றுர்கள். அது மட்டுமன்று காதலில் தமது உடல், ஊனத்தைப் பறிகொடுத்த மாணவர்கள் சுயமாக இயங்க முடியாதவர்களாகின்றுர்கள். மேலும் இன்று 90% காதல்கள் தோல்வியிலேயே முடிகின்றன. இதன் பாதிப்பின் பிரதிபலிப்பு சமுதாயத்தில், போதைவஸ்து, மது அருந்துதல் போன்றவற்றிற்கு அடிமையாகும் நிலையை வளர்க்கின்றது. சிலர் தோல்வியை தாங்கமுடியாது தற்கொலை செய்யத் துணிகின்றுர்கள் உளவியல் ரீதியில் நோக்கின் தோல்வியுறும்ருரின் வாழ்வு பரிதாபகரமானதாகும். இத்தகைய காதல்கள் இன்று சமுதாயத்தை சீரழியச் செய்கின்றது. எனவே இக் காதல் நிச்சயம் கண்டிக்கப்பட வேண்டும்.

காதல் ஒருவரிடத்தில் ஏற்பட்டால் அங்கு சுயநலமே பெரும்பாலும் தலை தூக்கும். சமுதாயம், குடும்பம், உறவுகள் என எவரையும் கவனத்திற் கொள்ளாது இடை

யில் வந்த காதலுக்காக பாச, பந்தங்களை வெறுத்து ஒதுக்குபவர்களும் உண்டு. காதலுக்கு கண் இல்லை என்று கூறியதும் இதனுல் தான் போலுள்ளது காதலின் முன் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எதுவுமே தெரிவதில்லை. இத தகைய காதல்கள் ஆசிர்வாதமற்ற, ஆதரவற்ற திருமணங்களாக முடிகின்றன.

இன்று மனிதரில் பல திறமைசாலிகள் கூட காதல் என்ற தீயில் விழுந்து அதனுல் பாதிக்கப்பட்டு தமது திறமைகளை மழுங்கடிக்கும் நிலையும் ஏற்படுகிறது. இதனுல் சமுதாயத்திற்கு பயனளிக்கும் சில விருட்சங்கள் பட்டமரமாகின்றன. இததகைய காதலால் மக்களிடையே சீர்கேடுகள், ஒழுககக் கேடுகள் ஏற்படுகிறது.

எனவே. காதல் கண்டிக்கப்பட வேண்டியதே.

செல்வி. அ. மேரி மாகிறேற்
முல்லைத்தீவு.

**கண்டிக்கப்பட வேண்டியது 2.**

காதல். காதல், காதல், எங்கு பார்த்தாலும் மிகவும் மலிவாகக் காணக் கூடிய கடைச்சரக்காகி விட்டது. காதல் என்ற வார்த்தைக்கே அர்த்தம் புரியாதவர்கள் கூடக் காதலிக்கத் தொடங்கிவிட்டார்கள். வாழ்க்கையில் நிகழும் விபத்துக்களில் இதுவும் ஒன்றே தவிர காதல் என்பது நிலையானதல்ல. இக் காதல் நிச்சயமாகக் கண்டிக்கப்படவேண்டியதொன்றே.

ஆண்கள் பெண்களையும், பெண்கள் ஆண்களையும் ஏமாற்றியே தங்கள் வாழ்நாளைக் கழித்து வரும் இந் நிலையில், இவர்களிடையே மலரும் காதல் என்பது நிலையானதல்ல, உறுதியானதுமல்ல. இக் காதலினுலே பாதிப்படைந்து இறுதியிலே பெற்றோரிடம் வந்து சேரும் போது பெற்றோருக்கு இவர்கள் ஒரு சுமையாக காணப்படுகிருர்கள்.

இக் காலத்துக் காதல், உடற் பொருத்தம் பார்த்து உருவாகிறதே தவிர, உளப்பொருத்தம் சிறிதும் இல்லை. இவ்வுடற் பொருததம் மறைந்துபோக, பின் நீ யாரோ, நான் யாரோ, நிலை இதுதானே. இன்றைய சமுதாயத்தில் நாம் காண்கிறோம்.

எனவே காதல், அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டியதே.

G. N. நிஹிலா
வவுனியா.

**கண்டிக்கப்பட வேண்டியது 3.**

சமுதாயத்தை உற்று நோக்குங்கள். பொதுவாக எவ்வயதினராக இருந்தாலும், ஒருவருக்கொருவர் தந்தை, மகள் என்ற தரத்திலிருப்பவரையே, இவர்களது உள்ளங்கள் எவ்வித கள்ளமற்ற வெள்ளையுள்ளங்களாக இருந்தாலும் ஒரு எச்சரிக்கையுணர்வுடனேயே பழக வேண்டியுள்ளது. இத்தரத்தினர் சில தினங்கள் தொடர்ந்து உரையாடினுலோ அல்லது ஒரு தேவையின் நிமித்தம் சேர்ந்து சென்றுவிட்டாலோ, காதலர் என்ற பட்டததை

சூட்டி கேலி செய்யும் இச்சமுதாயம் இள வயதினரான உங்களைப் பார்த்து என்ன மாதிரியெல்லாம கேலி செய்யுமென கொஞ்சம் கற்பனை செய்யுங்களேன். அத்துடன் எம் பெரியோர்கள் கூறிச் சென்ற ஆயிரங்காலத்துப் பயிராம் திருமணமும் அறிவுள்ள பண்புமிக்க சமுதாயத்தை உருவாக்க வேண்டிய நீங்களும் நன்ருகச் சிந்தித்துச் செயலாற்றுங்கள்.

அலுவலகங்களிலோ அல்லது வேறு இடங்களிலோ ஓர் ஆணே பெண்ணே ஒருவரது குணதிசயங்களால் ஈர்க்கப்பட்டால் அதற்குப் பெயர்தான் காதல் இக் காதலும் கூட நேர்மையான முறையில் தம் பெற்றோர்க்கோ அல்லது அவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பார்களெனத் தெரிந்தால் எம் வாழ்க்கையில் அக்கறையுள்ள பெரியோர்க்கோ தெரியபபடுத்தி நேர்மையாகச் செயவது தான் சாலச் சிறந்தது. அதை விடுத்து கல்வி கறக வேணடிய நேரத்தில் கவனத்தை செலுத்தாது காலத்தை வீணடித்தோ அன்றேல் நாம் எமது பெற்றோர்க்கும் சகோதரருக்கும் ஆற்ற வேணடிய கடமைகள் இருக்கும் போது காதல் வயபபட்டு கூத்தடிபபதோ அழகல்ல எனவே, காதல் கண்டிக்கபபட வேண்டியதே

கமலா
மீசாலையூர்

## வரவேற்கப்பட வேண்டியது 1

காதல் கண்டிக்கப்பட வேண்டியதா? இல்லவே இல்லை உண்மையாக காதல் வரவேற்க்கப்பட வேண்டியதொன்று. காதல் என்பது உள்ளத்தில் இருந்து தோனறுவது. அதை எவனொருவன் தான் நினைத்து உருவாக்குவது அலல. அது உள்ளத்தில் இருந்து இயல்பாகத் தோன்றும் உணர்ச்சி இது புனிதமானது, தெய்வீகமானது. இதைக் கண்டிப்பதற்கு எவருக்தும் உரிமை இல்லை.

மேலும் இது கண்டிக்கப்படுவதால் மனிதனது பூரணததுவம் தடுக்கப்படுகிறது. அன்பு அழிக்கப்படுகின்றது வாழ்க்கை இயந்திரமாக்கபபடுகிறது மனித உணர்ச்சிகள் பெறுமதியற்றதாகின்றது.

காதல் கண்டிக்கபபடுவதால் உணர்சிகள் அடக்கப்பட்டு. உளத்தாக்கங்களும், உளநோய்களும் தோன்றுகினறன உளச்சமநிலை குலேக்கப்படுகிறது. வாழ்கையில் விரக்தி தோன்றுகின்றது. ஒருவரிடம் வைக்கபபடும் உண்மையான அன்புதடுககபபடுவதால் மனிதன் மற்றவாகளை வெறுக்கற்றுக் கொளகிருன் சமுதாயத்தில் ஒவ்வொருவரிடையேயுமுள்ள அன்பு கவர்நத உறவு மறைகிறது இதனுல் சமுதாய ஒருமை குறைகின்றது. தீமைகள் பெருகுகின்றது. அது மட்டுமல்ல தாம்பத்தியம் விபச்சாரமாகின்றது. பெண்களை பிள்ளை பெறும் இயந்திரமாகவும் போதை தீர்க்கும் போதைப்பொருட்களாகவும் கணிக்கப்படுவர். விலைமதிப்பற்ற பெண்மை விலைபேசப்படுகிறது. ஒருமித்த மனநிலையில் தோன்றாத அன்பில்லாத் திருமண உறவு ஒரு

வகையில் சட்டரீதியாக விபச்சார மாகும்".

முற்காலப் பெண்கள் கல்வி அறிவற்ற காலம். பெற்றோர்கள் இணைத்து வைக்கும் இருவரும் முரணான போக்குகளும் இயல்புகளும் கொண்டிருந்தாலும் கலாச்சாரம் என்ற போர்வைக்குள் நாம் இருந்தோம். தங்களுடைய விதி அவ்வளவுதான் என்றெ எண்ணி எல்லாவற்றையும் சகித்து வாழ்ந்தார்கள். பெணகளும் தங்கள் குடும்பம் தான் தங்கள் உலகம் என்றும், கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று ஆண்களின் எல்லா அடக்குமுறைகளுக்கும் அடங்கி. தங்களின் சுதந்திரம், ஆசைகள் எல்லாவற்றையும் கடமையதின் பேரில் தியாகம் செய்து வாழ்ந்தார்கள். ஒருவரின் தியாகத்தில் இன்னொருவரின் வாழ்வு மலர்ந்ததால் குடும்பம் பிளவுறாமல் இருநதது ஆனால் இக்காலததில் பெண்கள் கல்வியறிவுடையவர்களாக, உலகம் தெரிந்தவர்களாக தங்கள் காலிலேயே தாங்கள் நிற்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள் ஆண்களின் சர்வாதிகாரத்துக்கும், அடக்குமுறைகளுக்கும் எதிர்குரல் எழுப்புகின்றார்கள், சுதந்திரத்துக்காக ஏங்குகின்றார்கள். ஆண் பெண் சமத்துவத்தை விரும்புகின்றார்கள். ஆனால் ஆணகளோ இன்னும் பழைய நிலையிலேயே இருக்கின்றார்கள். இவற்றை எல்லாம் பெண்களுக்கு வழங்குவதற்கு அவர்கள் தயாராக இல்லை இந்நிலையில் பெற்றோர் இருபாலாரையும் இணைத்து வைத்தார்களானால், அவர்கள் குடும்ப வாழ்க்கை ஏட்டிக்கு போட்டியாக அமையும். இருவரிடையேயும் இயல்பாக விடடுக் கொடுக்கும் தன்மை, தியாக மனப்பான்மை, புரிந்துணர்வு இருக்காது. இதனால் குடும்பத்தில் குழப்பங்களும் சிக்கல்களும் அதிகரிக்கும். அதோடு மட்டுமல்ல பெண்ணுக்கு தன்னால் தன்காலில் நிற்கமுடியும் என்னும் துணிவு இருப்பதால் ஆணுடன் சண்டை பிடிக்கவோ விவாதததில் ஈடுபடவோ நயங்கமாட்டாள். மண வாழ்வின் வெற்றி ஒருவர் ஒருவரது விருப்பு வெறுப்புக்களை அறிந்து ஒருவருக்கொருவர் நிவர்த்தி செய்து வாழ்வதில் தங்கியுள்ளது.

ஆகவே இப்போ நாட்டில் உள்ள சூழ்நிலையில் காதல் ஒன்றுதான் இருவரையும் இணைத்து வைத்து ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்து ஒருவருக்கொவர் தியாகம் செய்து வாழ்க்கை சுமுகமாக நடை பெற ஒரே ஒரு ஊடகமாக அமையும். காதலுள்ள வாழ்வில் ஒவ்வொருவரும் நமக்காக வாழமாட்டார் மற்றவர்க்காக தான் வாழ்வார்கள். இருவரிடையேயும் தன்னலமற்ற அன்பு காணப்படும். தங்கள் அனைவரின் மகிழ்சசியில்தான் தங்கள் மகிழ்ச்சி இருப்பதாக உணர்வர். இதனால் இருவரும் வாழ்வின் ஒவ்வொரு நிமிஷத்தையும் சந்தோஷமாக அனுபவிப்பார்கள் வாழ்வு வாழ்வதற்கே என்றும் மனிதனாக பிறந்திட மாதவம் செய்திட வேண்டும், என்றும் நிலைக்கும் நிலை உருவாகும்.

முடிவாக காதல் என்பது வார்த்தைகளால் வளர்கக்கூடிய தொன்றல்ல. அது உணரப்படவேண்டியது. அதை உணர்ந்தவர்கட்கே அதன் மகத்துவம் புரியும். எவரிடமும் அதைக் கண்டிக்க முனையவே கூடாது.

கலையரசி குணரட்ணம்
கோப்பாய்

## வரவேற்கப்படவேண்டியது 2

ஓர் ஆண்மகனே, பெண்மகளோ பெண்ணிலோ, ஆணிலோ உள்ள அழகையோ, அறிவையோ குணத்தையோ, இன்னும் ஏதோ ஏதோ கண்டு காதல் கொள்கின்றார்கள். அக் காதல் உண்மைக் காதலாக இருக்குமானால் இருவரும் தங்கள் வாழ்க்கை பூராகவும் சந்தோசமாகவும், அன்பாகவும் இருப்பார்கள். எனெனில் என்னத்தைக் கண்டு எந்த நோக்கத்தில் காதல் கொண்டார்களோ அவை இறுதி வரை (வாழ்க்கை பூராகவும்) அவர்களில் இருப்பதாக உணர்ந்து வாழ்வார்கள். இப்படியாக அன்புடன் சேர்ந்து பாசமாக வளரும் காதல் எந்த நேரத்திலும் அதாவது அவர்கள் வாழ்வில் வரும் துன்பங்கள், துயரங்கள், சோதனைகள், வேதனைகளிலும், ஏன் மரணத்திலும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியமாட்டோம் எனும் அளவிற்கு காதல் வளர்கிறது. அப்படியான ஒரு காதல் ஏன் கண்டிக்கப்பட வேண்டும்?

''காதல் என்பது மலராகும்
அது கண்களிலே உருவாகும்
ஆயிரம் ஜென்மங்கள் ஆனாலும்
அது அழியாத தெய்வீக கனவாகும்.

ஓர் ஆணும், பெண்ணும் காதலிக்கின்றார்கள். அந்த வேளையில் இருவரும் ஒருவரை ஒருவர் உளமாற அறிந்து கொள்கின்றார்கள், புரிந்து கொள்கிறார்கள். அவ்வாறு ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து கொள்வதனூடாக தங்கள் எதிர்கால வாழ்விற்கு வித்திடுகின்றார்கள். தங்கள் இன்பத்திலும் துன்பத்திலும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிய மாட்டோம் என்னும் அளவிற்கு அந்தக் காதல் முதிர்கிறது. அவ்வாறு முதிர்ந்த காதல் அழிக்கக் கூடியதுமலல, அழித்தாலும் அழியாதது.

அ. அகஸ்ரீன்
இரணைப்பாலை

## வரவேற்கப்படவேண்டியது 3

காதல் என்பது அன்பை குறிக்கும் மறுபெயர். அன்பு கொள்ளாத மனிதரே உலகில் இல்லை. அன்புக்குள் அடங்குபவை மதிப்பு, மன்னிப்பு, பாசம், பண்பு விட்டுக் கொடுத்தல் இவைகள் ஆகும். காதல் இல்லை என்றால் (அதை தடுத்து வைப்பது நன்று என்றால்) பூமி என்ற ஒன்றில் மனிதரே இருந்திருக்க முடியாது. மனிதன் என்ற பெயரில் ஆண், பெண் எனும் இருபாலார் தான் உள்ளனர். இவர்களில் அனபு செய்யாதவர்கள் உலகில் ஒருவர் கூட இல்லை. அப்படி இருக்க அன்பு

செய்யும் உள்ளங்களை தண்டிக்க யார் தகுதி உடையவர்! இரு இளம் உள்ளங்கள் அன்பு கொண்டால் புரிந்துணர்வு விட்டுக் கொடுத்தல், பரஸ்பர உறவு ஏற்படுகிறது. நாளை அது ஒரு நல்ல குடும்பமாகிறது. பல குடும்பங்கள் அன்பு கொண்டால் சமூகம் ஆகின்றது. பல சமூகங்கள் ஒன்றுபட்டு அன்பு வழி நடந்தால் நாடாகின்றது. பல நாடுகளின் அன்பே ஒற்றுமையான உலகை உருவாக்குகின்றது.

A. J. ஆனந்தி

வரவேற்கப்படவேண்டியது 4

திருமணம் என்ற பந்தத்தினுள் நுழையும் ஆணும், பெண்ணும் இன்றைய கால கட்டத்தில் ஒரு ஒப்பந்தமாக தமது இல்லற வாழ்க்கையை ஆரம்பிக்கின்றார்களே தவிர எத்தனை பேர் உண்மையான காதல் என்ற சுகந்தத்தை அனுபவிக்கின்றார்கள். காதல் என்பது வெறும் இனக்கவர்ச்சியோ அல்லது பருவமயக்கத்தால் ஏற்படுவதோ அன்றி வயதுக் கோளாறினால் ஏற்படும் ஒரு சலனமோ அல்ல. புகழோ, இகழோ பொருட்படுத்தாது ஊனையும், உணர்வையும் அப்பால் தாண்டி தொடரும் அன்பே காதல் எனப்படும்.

எமது பாரம்பரிய வரலாறுகளை நாம் புரட்டிப் பார்க்கும் போது அங்கே நிலவிய காதல் உறவுகள் தான் இன்று காவியமாக அவற்றை நாம் படிப்பதற்குக் காரணமாக விளங்கியதெனலாம். அத்தகைய காதலை புகழ்ந்தும் மகிழ்ந்தும் படிக்கும் நாம் எம்மவர்கள் காதல் செய்யும் போது அவற்றைக் கண்டிப்பது எவ்வகையில் நியாயமானது? காதல் என்பது உள்ளங்களுக்குச் சொந்தமானது. அது உடல்களுக்கல்ல. ஒருவர் நினைப்பதை மற்றவர் கூறவும் அவரின் தேவையினை உணர்ந்து செயற்படவும் சிரிக்கும்போது சிரித்தும் அழும் போது அழுதும் உறவாடி வாழும் அன்பு மயமான உலகம் அது.

ஆனால் இன்று எம்மத்தியில் எத்தனை பேர் அன்பைக் கொன்று விட்டு ஆசாரத்தைக் கடைப் பிடிக்கின்றார்கள். அன்பால் ஒன்றுபட்டவர்களின் உள்ளங்களின் மேல் சமாதிகட்டி விட்டு மாலை மாற்றுகின்றார்கள். எனவே காதல் என்பது எல்லாவற்றையும் கடந்து நிற்பது. எத்தகைய ஏற்றத் தாழ்வுகளுக்கும் அப்பாற்பட்டது. எனவே உள்ளங்களுக்குச் சொந்தமான உன்னதமான காதல் என்பது உண்மையில் கண்டிக்கப்படவேண்டியதொன்றல்ல.

எம். கே. தேவதாசன்
கோவில் புதுக்குளம்,
வவுனியா

வரவேற்கப்படவேண்டியது 5

மனிதஇனம் தோன்றிய காலம் முதல் இன்றுவரை காதல் என்னும் உணர்வு இருபாலார்க்குமிடையே

இருந்து வருகின்றது. காதலை உண்மையென்பவர்களும், மாயை என்பவர்களும் இவ்வுலகில் உள்ளனர். சங்க காலம் முதல் இன்று வரை, உலக மொழிகள் அனைத்திலுமுள்ள கலை, இலக்கியங்கள், புராண, இதிகாசங்கள் காதலை மையமாக வைத்து படைக்கப் பெற்றது அனைவருமறிந்தஉண்மை. நாம் இனம், மொழி, கலாச்சாரத்தால் பிரிக்கப் பட்டிருந்தாலும் காதல் என்ற உணர்வினுல் கட்டுண்டு போகும்போது, யாவரும் ஒன்ருகவே இருக்கின்ருேம். காதல் என்பது உணர்வு பூர்வமானது. இதைப்பற்றி ஆழமாக அறிந்திருப்பவர் மிகச்சிலரே, ஆகவே காதலைக் கண்டிப்பது தவருகும்.

இந்த மூன்றெழுத்திற்குள்ள சக்தியை எவராலும், அழிக்கவோ, மறைக்கவோ முடியாது. பெற்ருேர்கள், சகோதரர்கள் அல்லது பாதுகாவலர்களாக இருப்பவர்கள், தமக்குரிய ஆணே பெண்ணே காதலிப்பதை கண்டிப்பது, அவர்களிற் கேற்பட்ட தாழ்வு உந்தலையும், பெருமையையும் எடுத்துக்காட்டுகின்றது. இவர்களால் தண்டிக்கப் படும் நபர்கள் எடுத்துக்கொள்ளும் முடிவுகள் கூடுதலாக விபரீதமாக முடிகின்றன. தற்கொலை, கொலை, அவமதிப்பிற்குட்படவும் முயன்று, சிலர் வெற்றியையும், சிலர் தோல்வியையும் ஏற்றுக்கொள்வதுண்டு. காதல் வயப்படுபவர்களை அழைத்து காதலின் காரணி மனம்தான் என்பதை உளவியல் அடிப்படையோடு எடுத்துக்கூறி, அவர்களை நல்வழிக்கு இட்டுச் செல்வது சமூகப் பிராணிகளான மனித இனத்தின் தலைசிறந்த புத்திசாலித்தனமாகும்.

எமது சமூகத்தில் புரையோடியிருக்கும் வரட்டுக்கௌரவங்கள், ஓர் ஆணும் ஓர் பெண்ணும் தமையுணர்ந்தும், உணராமலும் காதலிக்கும்போது கண்டிக்க வேண்டுமென்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றது. சமூகப் பிராணிகளான நாம் பிறப்பின் நோக்கம் இறப்புப்பற்றிய தெளிவான சிந்தனை அத்துடன் வாழ்க்கை பற்றிய விழிப்புணர்வுடனுன, புரிந்துணர்வு நன்றே அமையுமாயின் காதலை உதாசீனப்படுத்தி கண்டிக்க மாட்டார்கள். காதலிப்பவரும் காதல் என்ருல் என்ன? என தெளிவான சிந்தனையுடன் செயற்பட்டால் கண்டிப்பிற்கு ஆளாக நேரிடுதலைத் தவிர்க்கமுடியும். இன்றைய சமூக வாழ்க்கையில் இனம், மதம், சாதி, அந்தஸ்து போன்றவையே காதலைக் கண்டிக்கும் காரணிகளாக உள்ளன. இவற்றிற்கப்பால் மனம்தான் மூலகாரணி என்பதை எடுத்துரைத்து, உளவியலறிவால் சற்றே பரந்த நோக்குடன் பார்த்து, நமக்கு அரிதாகக் கிடைத்த மனிதப் பிறவியை சந்தோஷமாக அனுபவிப்பது, எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டிய கடமையுணர்வாகும்.

எமது சமூக வாழ்க்கையில் காதலை குற்றமாக நினைத்து கண்டிக்கும் சுபாவம் பரவலாகக்

காணப்படுகிறது. இதற்குக் காரணம் எமது குறுகிய மனோபாவம். இக்குறுகிய மனோ நிலையிலிருந்து நல்ல மனவளர்ச்சியை, உளவியல் அறிவினூடே பெற்று இன்று இச் சமூக வாழ்க்கையை எதிர் நோக்கும் பல பிரச்சினைகளில் ஒன்றாகிய காதலையும் கண்டிக்காது, புனிதமாக மதித்து, அதற்கு உட்பட்டிருப்போர்க்கு நல் அறிவுரை வழங்கி புதிய வாழ்க்கையில் காலடி எடுத்து வைத்து, சுபீட்சகரமான மணவாழ்க்கையை அமைக்க உதவி செய்வது நமது தலையாய கடமையாகும். நமது கடவுளர்கள் காதலிப்பவர்கள், அது குற்றமல்ல. ஆனால் அடுத்த வீட்டுப் பெண் ஆண் காதலித்தால்தான் குற்றமா? காதலை நல்நோக்குடன் எதிர் நோக்கி, புதிய சமுதாயம் படைப்போமாக!

ச. இராமச்சந்திரன்
கரவெட்டி

---

''காதல் இருக்கையில் வாழ்வும் வேலைகளும் இன்பமாகி விடுகின்றன. இதயத்தில் காதல் மலர்ந்திருக்கையில் நம் பாதையில் நம்மை எதிர்படும் இடர்பாடுகளைச் சமாளித்து முன்னே நடப்பது மிக எளிதாகிவிடும்.''

— லியோ டால்ஸ்டாய், ரஷ்யா

---

**வரவேற்கப்படவேண்டியது 6**

உலகில் உருவான அத்தனை ஜீவராசிகளுக்கும் காதல் என்ற உணர்வு பொதுவானதாகும். அவற்றின் இயல்பான சகல உயர்ரக உணர்வுகளுடனும் காதல் உணர்வும் இரண்டறக் கலந்த ஒரு உணர்வாகவே இருக்கின்றது. மனிதர் இனத்திலும் ஏதோ ஒரு வகையில் காதல் உணர்வு வெளிப்பட்டுக் கொண்டேதானிருக்கின்றது இன்னும் சொல்லப் போனால் காதல் உணர்வற்ற மனிதனே இவ்வுலகில் இல்லையெனலாம். அந்தளவிற்கு மனிதனுடன் காதல் உணர்வும் கலந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். மொத்தத்தில் காதல் உணர்வுதான் இந்த மனித சமுதாயம் மட்டுமென்ன அனைத்து உயிரின உருவாக்கத்திற்கும் ஏதோ ஒருவகையில் காரணம் என்றுகூட கூறலாம்.

ஆனால் இந்த காதல் உணர்வு ஒவ்வொரு மனிதனிடம் இருந்தும் வெளிபடும் விதம்தான் வித்தியாசமானதாக இருக்கின்றது. காதல் என்னும் பொழுது அன்பு செலுத்தல் அல்லது அன்பு கொள்ளல் எனலாம். எனவே ஒரு ஆள் இன்னொரு ஆண்மீதோ அல்லது ஒரு பெண்மீதோ காதல் கொள்ளலாம். அதாவது அன்பு செலுத்தலாம். ஆனால் எமது சமுதாயத்தில் காதல் என்றதும் அது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஏற்படுகின்ற தவறான கீழ்த்தரமான பாலியல் ரீதியான கவர்ச்சியுறவே என்ற கருத்தே வேரூன்றியிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இதற்

குக் காரணம் காதல் என்ற சொல்லின் அர்த்தத்தைப் புரியாமல் அதாவது அன்பு செலுத்தல் என்ற பதத்தை விளங்காமல் ஆண் பெண் இருவருக்குமிடையில் நிலவும் உறவு மட்டும்தான் காதல் என்று மக்கள் விளங்கிவைத்திருப்பதேயாகும்.

உளவியல் ரீதியாக நோக்கும்போது, உளவியல் ரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்ருக இந்த காதல் என்னும் அன்பு செலுத்தல் விளங்குகின்றது, உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களால் தான் அன்பு செலுத்தப்பட வேண்டுமென்றே விரும்புகின்ருன். ஒருவன் எந்தளவிற்கு மற்றவர்களால் அன்பு செலுத்தப்படுகின்ருனே அந்தளவிற்கு அவனது ஆற்றலும் வலுவடைந்து சமுதாயத்திற்குப் பயனளிப்பதைக் காணலாம். இவ்வாறு அன்பு செலுத்தப்படுபவன் எவ்வளவு அழகற்றவனுகவும், ஆரோக்கியமற்றவனுகவும் இருந்தாலும் சரி மற்றவர்களால் அன்பு செலுத்தப்படும்போது அவனது நிலையையே மறந்து ஆற்றல்மிக்க மனிதனுக புத்துயிர் பெற்று விடுகின்ருன். அதே நேரம் ஒருவன் எவ்வளவு அழகானவனுகவும், செல்வந்தனுகவும், ஆரோக்கியமானவனுகவும் இருந்தாலும் சரி மற்றவர்களால் அன்பு செலுத்தப்படாமல் புறக்கணிக்கப்படுவானுனல் அவன் வாழ்வில் விரக்தியுற்று ஆரோக்கியமிழந்து இறுதியில் தன்னையே அழித்துக்கொள்வான்.

ஏ. ஆர். எம். ஜமால்தீன்,
புழுதிவயல், புத்தளம்.

வரவேற்கப்படவேண்டியது 7.

காதல் என்பது இரண்டு தூய்மையான உள்ளங்களிடையே மலரும் ஓர் நிலையான பந்தமாகும்.

உண்மையான நட்புறவுடன் பழகும் இரு ஒன்ருன இதயங்களைப் பிரிக்க முற்படுவது மிகவும் பரிதாபமான செயலாகும். காதலைக் கண்டிக்கும் பெற்ருேரோ அல்லது சமுதாயத்தினரோ அவ்விரு இதயங்களின் நிலையையும் உணர்கிருர்களா? தமது கௌரவம் நிலைக்க வேண்டுமென்பதற்காக அவர்களது பிள்ளைகள் காலம் முழுவதும் கண்ணீர் விட வேண்டுமா? அதைப் பார்த்துப் பெற்ருேர்கள் மனமுருகி அழ வேண்டுமா? கேட்பதையெல்லாம் சிறு பராயத்திலே வாரி வழங்கும் பெற்ருேர் வாழ்க்கையின் இறுதிப் போராட்டத்தில் மட்டும் ஏன் அவர்களுடன் போர் புரிகிருர்கள். ''பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு'' என்பார்கள். ஆனுல் இவ்விடயத்திலே மட்டும் பெற்ற மனம் கல்லாகிறதோ?

காதலுக்குப் பணமோ, அழகோ அவசியமில்லை உண்மையான தூய அன்பு மட்டுமே போதுமானதாகும். சிலர் ''பணத்தையும் அழகையும் மையமாகக் கொண்டதே வாழ்க்கை'' என எண்ணி இவற்றின் காரணமாகவும் காதலைக் கண்டிக்கலாம். இது அவர்களது அறியாமையையே வெளிக்காட்டுகிறது. கண்டிக்கும் போது இத்தோடு இருவரின் உறவிற்கும் முற்றுப் புள்ளி வைத்தாகி விட்டது என்று சில பெற்ருேர் நினைக்கலாம். கண்

டிப்பதனுல் இன்னும் அதிகமாக அன்பைக் கூட்டுகிருர்களே தவிர குறைக்கவோ அழிக்கவோ முடியாது. உண்மையான தூய காதலைக் கண்டிப்பதால் அது அழிந்து போகப் போவதில்லை. எனவே காதல் கண்டிக்கப்பட வேண்டியது அல்ல.

G. நெடாலிவூட்
கோவிற் புதுக்குளம்

பாராட்டப்படுவோர்:-
இ. அகிலன், வேலணை, யாழ். பிரேம் யூடித்;
க. புஸ்பராஜா, மட்டக்களப்பு

---

ரோஜாச் செடியில் முள் இருக்கிறதே என வேதனைப்படாதே அச்செடியில் ரோஜா பூ மலர்கிறதே என மகிழ்ச்சிகொள்.

---


ADMISSIONS IN WEST - GERMAN UNIVERSITIES

Do you intend to go to West - Germany
for higher studies?
For details Please contact personally or write with
M. O. / P. O. for Rs. 15/-
to

Mr. A. A. POTHYNAR
(Director)

Jaffna Academy of Languages
25; ST. PATRICK'S ROAD,
JAFFNA.

# வாசி பின் யோசி

— ஏ. பி. வி. கோமஸ் – பி. ஏ. டிப். இன். எட்.

அறியாமையைப் போக்குவதற்கு வாசிப்பு, மிகமிக முக்கியம். பள்ளிக்கூடம் சென்றுதான் கல்விகற்க வேண்டும் என்பதில்லை. வாழ்க்கை அநுபவமே வளமான கல்வியாகும்.

எனில், ஏனையவர்களின் ''வாழ்வை'' வாசிக்கும் திறன் நமக்குத் தேவை.

வாசிப்பது எப்படி என்று எண்ணுகிறீர்களா? ஆமாம் சிந்தியுங்கள்.

முதலில் சிந்தியுங்கள் ஆமாம், எதனை வாசித்தாலும் முதலில் சிந்தியுங்கள்.

''வாசி பின் யோசி'' என்பதை வளமான வாக்காகக் கொள்ளுங்கள்.

யோசி என்பதின் நற்பொருள் என்னவென்றால் நம் மனத்தை ஒருமைப்படுத்துவதே.

அடுத்து வாசிக்கும் பொழுது, அதனை எழுதியவர் எம்மின் நல்ல உற்ற நண்பர், நமக்காகவே எழுதியிருக்கிறார் என்ற எண்ணத்தோடு வாசிக்கவேண்டும். எனவே –

அடுத்தவர் வாழ்வை, அறியும் போதும் ''அவர் என்னுடைய உற்ற நண்பர்'' என்ற எண்ணத்தோடேயே நோக்குங்கள். இன்னும் –

எழுதப்பட்ட பொருளும் எனக்காகவே எழுதப்பட்டுள்ளது என்ற எண்ணததோடு வாசியுங்கள். வேறு யாருக்காக எழுதினார், ஆமாம் அடுத்தவனை யாருக்காகப் படைத்தார் இறைவன். சற்று சிநதித்தால் சட்டென விளங்கும். மேலும் –

நாம் எதை வாசிக்கின்றோம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அதாவது வாசிக்கும் அந்த விடயம் நமக்குத் தேவையானதாய் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதற்காக, ஏனையவைகளை ''தூர எறிதல்'' எனபது அல்ல. காலத்துக்குக் காலம் நமக்குத் தேவையானவை, தேவைக்கேற்பமாறும். 'சிறு துரும்பும் பல்லுக்குதத உதவும்' என்பது சீரான கருத்து. ஆம் –

மனித ஜீவன்கள் எல்லாம் நமது பாடப்புத்தகங்கள் என்பதை மறந்து விடக்கூடாது.

அழகிய அட்டையும் அழுத்தமான அச்சும் கொண்டவை மட்டு மல்ல நல்ல புத்தகங்கள்!

அன்றாடம் காட்சிகளும், அழுக்கு ஆடைக்குள் அடங்கிக் கிடக் கும் அங்கங்களும் நமக்கு அறிவைப் புகட்டும் –

அடுத்து என்ன செய்யவேண்டும்?

வாசித்துப்பின் யோசித்ததினுல் கிடைத்த எல்லா நற்கருத்துக்களை யும் ஒரே நேரத்தில் கடைபிடிக்க முடியாமற் போனுலும் காலத்துக்குக் காலமாவது கடைப்பிடியுங்கள். ஆம் –

வாசிக்கும் யாவையும் நம் வாழ்விற்கான பாடங்கள். அவை நம் வாய்ப்புக்கும் வசதிக்கும்ஏற்ப மாறும் அவ்வளவு தான். - எனவே!

மனித ஜீவன்களும் அவ்வாறேதாம் காலத்துக்குக் காலம் ஒவ்வொருவருடைய வாழ்வும் நமக்கு நல்லநல்ல பாடங்களைத் தரும் தேவையாகில் உடனடியாக நடவடிக்கை எடுங்கள். ஆம்!

இனி என் குறுக்கே நிற்க வேண்டும்.

வாசித்தீர்கள் யோசியுங்கள். நான் உங்கள் நண்பன், உங்களுக் காகவே எழுதினேன். இக்கருத்துகள் இப்போதே தேவைப்படலாம். அல் லது எப்போதாவது தேவைப்படலாம்.
புரிந்ததா?

---


"நான் 15 - வது ஆண்டுமலர்
தயாராகிறது.

உங்கள் சந்தாவை

புதிப்பிப்பதோடு,

பிரதிக்கு முந்துங்கள்.

ஆண்டு சந்தா
30 ரூபா மட்டுமே

# முடிவு எடுக்க முடியுமா?

— ஜெறேம்

நாளுக்கு நாள் நடந்துகொண்டிருக்கும் மனித வாழ்விலே நாளுக்கு நாள் இன்பங்கள், துன்பங்கள் நேரிடடுக்கொண்டே இருக்கின்றன. இந் நாளாந்த நிகழ்வை மனிதன் விரும்பியோ, விரும்பாமலோ முகங் கொடுக்க வேண்டியுள்ளது. பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பது முக்கிய மல்ல. ஆனால் எவ்வாறு முகம் கொடுக்கிறோம் என்பதுதான் முக்கிய மான விடயம். எப்படியிருப்பினும் அப் பிரச்சனைகளை கடந்து செல்வது இன்றியமையாததாகும். நாம் அப் பிரச்சனைக்கு எடுக்கும் முடிவு எவ் வாறு கடந்து செல்கிறோம் என்பதாக அமைகிறது.

முடிவு எடுப்பது என்பது குயவன் களிமண்ணை மட்பாண்டமாக்குவது போன்றதொரு கலை. களிமண் எவ்வாறு வனையப்பட்டு மட்பாண்ட மாகிறதோ அதேபோல நாம் மறு வாழ்வில் எடுக்கும் ஒவ்வொரு முடி வும், நம் எதிர்கால வாழ்க்கையை உருவாக்குகின்றன அதாவது வாழ் வில் பிரச்சனைகள் வரும்போது எப்படி முடிவு எடுக்கிறோம் என்பதை பொறுத்து எமது எதிர்கால வாழ்வு தங்கியுள்ளது. எம்மில் பலர் இதை அறியாது போவதனுல் பிரச்சனைகளை எதிர்கொள்ள முடியாது போய் விடுகிறது.

வாழ்வில் சரியான முடிவு எடுத்தவர்களே முன்னேறி இருக்கிறார் கள். சிலரது வாழ்வில் அவர்கள் எடுத்த முடிவுகளே அவர்களை மக்கள் மனதில் நிலைநிறுத்திவிட்டது. மது அருந்துவதில்லை என்று பலர் எடுத்த முடிவுகள் பிற்காலத்தில் அவர்களது உயர்வுக்கு காரணமாக அமைகிறது. நாட்டின் தலைவர்கள் ஒரு நல் முடிவு எடுக்கும்போது நாடு நல்வாழ்வு பெறுகிறது. நாமும் வாழ்வில் முடிவு எடுத்துக்கொண்டிருக் கிறோம். ஆனால் சில வேளைகளில் அதை உணருவதில்லை. சிலர் முடிவு எடுப்பதில் மன்னர்களாக விளங்குகிறார்கள். சிலர் சோடைகளாக நிற் கிறார்கள். அந்நிலையை நாம் எமது அனுபவ வாயிலாகவே பெற்றுக் கொள்ள வேண்டும்; வளர்க்க வேண்டும்.

ஓர் அறிஞன் கூறுகிறார்: ''ஒவ்வொருவர் வாழ்விலும் பெரிய மகத் தான சம்பவங்கள் ஒன்றிரண்டுதான் வரும். ஆனால் வாழ்வில் சின்னஞ் சிறிய வெற்றிகள் ஏராளமாக வரும். வாழ்வில் நமது சின்னச் சின்ன வெற்றிகளையும், இரசிக்க அனுபவித்து மகிழ நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.''

ஆம், மகத்தான சம்பவங்களுக்காக அலையாமல், வாழ்வை சந்தோச மாக்கி நாளாந்த நிகழ்வுகளை இரசிக்க வேண்டும். அதேபோல மகத்

தான சம்பவங்களுக்கு முடிவெடுக்கும்போது மட்டும் சிந்திக்காமல், சாதாரண நிகழ்வுகளுக்கு முகம் கொடுக்கும் ஒவ்வொரு தடவையும் சிந்தித்து செயல்பட வேண்டும். சிறிய நிகழ்வுகள் பாரிய நிகழ்வு களுக்கே இட்டுச் செல்லலாம்.

ஒரு முடிவை தெரிந்துகொள்ளும்போது அவற்றில் எது கஷ்ர மில்லாதது, பாதுகாப்பானது என்று தெரிந்துகொள்ள கூடாது மாறாக, எந்த முடிவினால் நிறைய பயனுண்டாகும். எந்த முடிவு நமது இலட் சியத்துக்கு இட்டு செல்லும் என்பதை யொட்டி முடிவெடுக்க வேண்டும்.

முடிவெடுக்கும் வழிமுறைகளை பெரும்போக்காக ஐந்து பிரிவுகளாக சமூக இயல் அறிஞர்கள் வகுத்துள்ளார்கள்.

அவையாவன:
1. சூழ்நிலை.
2. நமது இலட்சியம்.
3. மாற்று வழிகள்.
4. அதன் விளைவு.
5. செயல்படுத்தல்.

**(1) சூழ்நிலை.**

நாம் முகம் கொடுக்கும் பிரச்சனை என்ன? ஏன் அது பிரசசனையாக உள்ளது? இதற்கான முடிவு என்ன? மாற்று முடிவுகள் உண்டா? இதைப் பற்றி பிறர் அபிப்பிராயம் என்னவாயிருக்கும்? மாறும் சூழ் நிலையால் தாக்கம் உண்டா? இவை போன்று நாம் சிந்திக்கும்போது சூழ்நிலையைப் பற்றிய ஒரு பரந்த அறிவு தெளிவாகும்.

**(2) இலட்சியம்.**

எனது வாழ்வின் குறுகிய கால, நீண்ட கால இலட்சியம் என்ன? எடுக்கும் முடிவு எவ்வகையில் இதற்கு உறுதுணையாகும். எனது திறமை கள், பலவீனங்கள் எவை? நான் விரும்பும் கொள்கை என்ன? அதற்கு முடிவு தடங்கலாகுமா? இலட்சியத்தை அடைய அது எவ்வகையில் உறுதுணையாகும்?

**(3) மாற்று வழிகள்.**

இப் பிரச்சனையை வேறெந்த வழிகளில் சமாளிக்க முடியும் ? இதற் கான எனது அறிவு போதுமா? அது விடயமாக யாரையாவது சந்திக்க வேண்டுமா? எதைப்பற்றியாவது சிந்திக்க வேண்டுமா?

(4) அதன் விளைவு.

எமது முடிவுக்கான மாற்று யோசனைகளால் ஏற்படும் விளைவுகள். அனுபவ சாத்தியம் உண்டா? யார் எதிர்த்தாலும், நட்டம் ஏற்பட்டாலும் இம் முடிவை பின்பற்றலாமா?

(5) செயல்படுத்துதல்.

நாம் எடுத்த முடிவுகளில் எது சிறந்தது? ஏன் அதை பின்பற்ற தயங்குகிறேன்? இடையில் மாற்றிக்கொள்ள முடியுமா? விளைவு விபரீத மானால் சமாளிக்கமுடியுமா? செயல்படுத்துவதில் உள்ள தடயங்கள் எவை?

இவ்வாறு நாம் எமக்கு ஏற்பட்ட நிகழ்வொன்றை இவையூடாக சிந்திக்கும்போது, பரீசீலிக்கும்போது புது விடயங்கள் பல புலப்படும். நமது வாழ்க்கை நம்மிடமே உருவாகி நம்மிடமே வளர்ந்துவருகிறது. நமது கொள்கைகள், குணதிசயங்களைப் பொறுத்து நமது முடிவுகள் வேறுபடுகின்றன, முடிவுகள் நமது வாழ்வை நெறிப்படுத்தும் மைல் கற்கள்.

---

# எனக்குள் நானே!

— சார்ள்ஸ்

எனக்குள்ளேயே எத்தனை
போட்டிகள்.
வெளிச்சத்துக்குள்ளேயே எத்தனை
வெற்றிகள்.
எனக்கெனக் காண்பேன்.

பாவம்......!
மூச்சுப் புலராத நிமிட மொன்றில்
என்னையே — நான்
அழித்துக் கொள்வேன்

என்னை;
எனதையும்
அழித்ததில் நான் என்றுமே
வெற்றிக் கொடி நாட்டியதாய்
''அறியாமை''யும் கொள்வேன்.

இன்னமும்
எனக்கு நீ தோல்வியுற்றவனே
எனக்குள் நானே
வெற்றி கொண்டவன்......!

# அறியா இதயங்கள்

— M. A. ஷாம்
மு / வலையன் மடம்

மெய் விவாகமெனும் அரும் பெரும் கொடையைப் பெற்றவர் களைத்தரிசிக்க வந்தபோது இறை ஸ்தானத்திலே உன்னை நான் சந்தித்தேன். அன்பு மழையென்னும் கற்பனையில் நனைந்து அணை உடைந்த வெள்ளம் போல் ஏக்கத்துடன் இருக்கின்றேன். உன் கனவான பார்வையினுல் மென்மையான உள்ளத்தைப் புரிந்து கொண்டு விட்டேன். என் மனதில் ஓர் ஏக்கம்.

சிறியதோர் பெண்குயிலொன்றை தூது விடுகின்றேன். அது சிறகடித்து பறக்கிறது... ஏக்கத்தின் எதிரொலிதான் என் அடிமனதில் உன் தேன் வடியும் அழகு முகத்தைப் பதித்து விட்டேன். இனம் புரியாத அன்பு என் இதய வாசல்களை திறந்து விட்டன. இனியும் என் மனம் உறங்க மாட்டாது. பண அதிகார வெறிபிடித்த உன் பெற்றோர் செய்த கொடூரமான இச் செயலை நீயும் கடைப் பிடிக்கின்ருயா? என என் மனம் சிந்திக்கின்றது, ஆனுலும் உருளும் உலகில் இவைகள் எல்லாம் நீண்ட காலம் நிலைத்து நிற்கப்போவதில்லை.

''சென்ற பல காலத்திலே நிழலுக்காக பல நிழல் மரங்கள் செழிப்புடன் பல கிளைகளை விட்டு வளர்ந்தாலும் அவைகள் பிறருக்கு நிதானமான நிழலைக் கொடுப்பதில்லை'' நாமும் அவ் நிழல் மரங்கள் போல் வாழத்தான் வேண்டுமா? பெற்ரேர் செய்த அநியாயத்தில் ஊறி விட்டீரோ? புதியதோர் சமுதாயத்தில் வாழ வேண்டுமென்ருல் பெற்ரேரெனும் சமுதாயப் பாதையை விட்டு விலக வேண்டும்.

''பேசப்படும் போது சில வார்த்தைகள் இதயத்தினுல் திறக்கப்படுகிறது, பேசப்படாதிருக்கும் போது பல கோடி வார்த்தைகளை இதயம் தாழிடுகின்றது'' என்ற கூற்றை மறந்து விட்டாயே! நான் ஓர் ஏழை. அதிகார வெறி பிடித்தவனல்லன், இருப்பினும் இவனுக்கும் சிறிய இதயத்தில் அன்பு, பாசம் சமத்துவம் எனும் அம்சங்கள் உண்டென்பதை மறந்து விடாதே! எனது இருகரங்களால் அன்பு மாலையை உன் இதயவாசலில் சமர்ப்பிக்கிறேன். இனம் புரியாது உன் இதய வாசலைத் தாழிடாதே.

அவனின் அடிமனதிலிருக்கும் ஆழ்ந்த அன்பை அக்குயில் ராகம் மூலம் இசையப்பட்டதால் அவள் மனம் இழகின்றது. பண அதிகார வெறி பிடித்தவர்களுக்கெதிராக முற்றுப்புள்ளியெனும் எதிர்ப்பு இயக்கத்தினை இடுகின்ருள். இவ்விரு உள்ளங்களும் சந்திப்பெனும் பூங்காவில் திறந்த இதயம் கொண்டவர்களாக பேசுகின்ருர்கள்.

பாச மெனும் சமுத்திரத்தில் கரையெனும் முடிவு தேவை. ஆகவே இருவரும் இறைவனின் முன்னிலையில் அன்னிய சக்திகளின்றி திருமணம் எனும் திரு வருட்சாதனத்தைப் பெறுகின்றார்கள்.

*" மெய்விவாகம் என்பது கணவனும் மனைவியும் இன்பம் தேடிக் கொள்வதல்ல, வருங்கால சந்ததிக்கே நன்மை தேடிக் கொள்வதேயாகும்"*

— அறிஞர் கூற்று

## எழுத்தாளர் பயிற்சிக் கருத்தரங்கு

அறவழிப் போராட்டக்குழுவினால் நடத்தப்படும் எழுத்தாளர் பயிற்சிக் கருத்தாங்கு டிசம்பர் மவதம் 15, 16, 17 - ம் திகதிகளில் கைதடி நவில்ட் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கலந்து கொள்பவர்களுக்கு உணவு, இருப்பிடவசதி என்பன அறவழிப் போராட்டக் குழுவினால் ஒழுங்கு செய்யப்படும்.


இரண்டு வருட இடைவெளிக்குப் பின் மீண்டும் எமது

## இலக்கிய நண்பர் நண்பியர் கழகம்

செயல்படத் தொடங்கியிருக்கிறது.
இதில் சேர விரும்பும் இளைஞர் யுவதிகள்
எம்முடன் தொடர்பு கொள்ளவும்

முகவரி;

''வெண்ணிலவன்''
54 A - தயா ஸ்ரோர்ஸ்,
பஸ்நிலையம்,
வவுனியா.

# அறியாப்பருவம் அழைக்கிறது

அப்பா நான் ஒருவரைக் காதலிக்கிறேன்! அவரைத்தான் மணம் செய்து கொள்ள விரும்புகிறேன் என்று ஒரு பெண் சொன்னதும், பெற்ருேர்கள் கவலைப்படுகிருர்கள். எங்காவது மாப்பிள்ளை பார்த்து கதையை மடக்கி விடுகிருர்கள். அவள், ஏன் அவனைக் காதலித்தாள்? அவளின் உணர்வுகள் என்ன என்பதைப் புரிந்து கொள்ள பெற்ருேர்கள் தவறிவிடுகிருர்கள். அத்தோடு அவளுக்கு அனுபவ முதிர்ச்சி போதாது என்று நினைக்கின்ருர்கள். ஏனென்ருல் அவளுக்கு 18 – 20 வயது மட்டுமே'

— அ. றூபருஜ்
அம்பிட்டியா

ஏன் அவள் அவனைத்தான் காதலித்தாள்? என்னுடைய சகோதரரின் நண்பர் ஒருவர் எங்களுடைய வீட்டிற்கு வந்திருந்தார். அவரைப் பார்த்தவுடன் என் உடலில் ஓர் இன்ப உணர்வு தோன்றுவதை புரிந்து நான் வீட்டிற்குள் சென்று விட்டேன். அவர் விடைபெற்றுக் கொண்டு போன பிறகு வீடே வெறிச்சோடி விட்டதைப் போன்ற பிரமை—எனக்கு ஏற்பட்டது, இந்த உணர்ச்சிக்கு என்ன பெயர்? இந்த உணர்வுதான் அவள் காதலுக்கு உந்து கோலாக இருந்திருந்தால், பெற்ருேர்கள் பேசி வரும் மாப்பிள்ளையால், அதே உணர்வை, அவளில் ஏற்படுத்த முடியுமா? ஒரு உளவியலாளர் கூறுகின்ருர் "உணர்வுகள், உறவுகளின் பிறப்பிடம்."

ஒரு பெண்ணிடம் இவ்வாறு எற்படும் உணர்வுகள், மனப்பக்குவத்திற் கேற்ப கட்டுப்படுத்தப்பட்டு, நல்ல உறவுகளை வளர்க்க அடிக்கல்லாக அமைகின்றது, உறவுகளை, சீர்தூக்கிப் பார்க்கும் பக்குவமடைகின்ருள். அப்போது தான் அவள், அவனை ஏற்றுக் கொள்வதா? வேண்டாமா? என்பதைப்பற்றி ஒரு முடிவெடுக்கிருள், இந்த விதத்தில் ஒரு பெண், காதலைப் பொறுத்தவரையில் வாலிபனை விட ஆழ்ந்த பற்றுக் கொள்கிருள். ஆரம்பத்தில் உற்சாகமாகவும், மிகவும் ஈடுபாடு கொண்டும் உள்ள வாலிபர்கள், போகப் போக எளிதில் சலிப்படைந்து, சறுக்கிக் கொள்வதும் வெகு சாதாரணம். ஆனல் அப்படிப்பட்ட நிலையிலும் கூட ஒரு பெண் தான்விரும்பி நேசித்தவனை அவ்வளவு எளிதில் மறந்து விடுவதில்லை.

திருமணத்தின் முன்பு, சிறிது காலம், ஒருவரோடு ஒருவர் பழகிப் பார்ப்பது நல்லது. இந்தக் காலத்தில் ஒருவர் ஒருவரின் பண்பு, பழக்கம், குறைகளை தெரிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுகிருர்கள். இருப்பினும், சில

வேளைகளில் எந்த ஒரு குறையும் அவர்கள் கண்களிலே படுவதில்லை. அவர்கள் அவற்றை கூர்ந்து கவனிப்பதில்லை. மணமான பிறகு தான் இவைகள் வெளிப்படுகிறது. ''இவரிடமா நான் மனத்தைப் பறி கொடுத்தேன்?'' என்று ஒரு பெண் சொல்கிறாள். ''உன்னைப் போய் மணந்து கொண்டேனே?'' என்று ஒரு வாலிபன் சொல்லிக் காட்டுவதும் சாதாரணமாக நிகழக்கூடிய ஒன்று.

மனோதத்துவ நிபுணர்கள் காதலை நுட்பமாக ஆராய்ந்து பார்க்கிறார்கள். ஒருவனை மணம் செய்து கொள்ளுமுன் ஒரு பெண் இந்தக் கேள்விகளைக் கேட்டுப் பார்த்துக் கொள்ளலாம்.

1. எண்ணமும், செயலும் இருவருக்கும் ஒரே தன்மையானதாக இருக்கிறதா? அதாவது அவரை நீங்கள் உங்களில் ஒரு பகுதியாகவே கருதுகிறீர்களா?

2. அவரை நீங்கள் நம்பலாம் என்று தோன்றுகிறதா? அதாவது அவர் கூட இருப்பது உங்களுக்கு பாதுகாப்பு அளிப்பது போன்ற உணர்ச்சியைக் கொடுக்கிறதா?

3, அவருடைய நன்மையைக் கருதி நீங்கள் எதையும் அவருக்குச் செய்ய முற்படுவீர்களா?

4. அவரை விட்டு நீங்கள் பிரிந்து இருக்கும் போது, அவரைப் பார்க்க முடியாமல் இருக்கும் போது, அவரிடம் கோபம் கொள்ளும் போது, உங்களுக்கு அவர்பால் உள்ள அன்பு ஒரு சிறிதும் குறையாமல் இருக்கிறதா!

5. அவருடன் நீங்கள் தொடர்ந்து பழகப் பழக அவருடைய துணை உங்களுக்கு எப்போதும் இருக்க வேண்டும் என்ற ஆவல் மேலும் மேலும் வளர்கிறதா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் உங்கள் பதில் ''ஆம்'' என்று இருக்குமானால் நீங்கள் தைரியமாக அவரை மணம் செய்து கொள்வது பற்றி முடிவு எடுக்கலாம். ஏனென்றால் ஒரு வாலிபனோடு ஏற்படுத்திக் கொள்ளப் போகும் சம்பந்தம் இரண்டு விஷயங்களை அடிப்படையாகக் கொண்டது. ஒன்று உடற் தேவை. இன்னொன்று உணர்ச்சித் தேவை. இந்த இரண்டையும் பூர்த்தி செய்யக் கூடியவனை வாழ்க்கைத் துணைவனாக தேர்ந்தெடுத்துக் கொள்வது சிறந்ததாகும்.

ஒரு பெண்ணுக்குத் துணைவனாக வரும் வாலிபன் என்னத்தை எதிர்பார்க்கின்றான். கண்ணுக்கும், சொண்டுக்கும் மை பூசுவதையோ, குதிச் செருப்புப் போட்ட கோணங்கி நடையையோ, கூந்தலைப் படாத பாடு படுத்திப் பெற்ற அலங்கோல ஸ்ரையிலையோ எதிர்பார்க்கவில்லை மாறாக. கண்ணுக்கு அடக்கமுள்ளவளாக, இருக்கவேண்டும் என்று எதிர் பார்க்கிறான். நாகரீகம் எவ்வளவு தூரம் முன்னேறினாலும்

ஒரு பெண் கணவனுக்கு, ருசி அறிந்து உணவு பரிமாருத வரை அவனுடைய அன்பை முழுமையா கப் பெற முடியாது.

ஒரு வாலிபன் விரும்புவது, தனக்கு வரப் போகிறவள் நன்கு படித்தவளாக இருக்க வேண்டும் என்பது தான். ஆனல் அதே நேரத்தில் பெரும் பாலானேர் வேலைக்குப் போவதை விரும்பு வதில்லை. ஏனெனமுல் பெண்ணின் உடல் இழைத்துவிடும், தேவை யற்ற ஆண்களோடு அர்த்தமற்ற தொடர்புகள் நாளாவட்டத்தில் தனது மண வாழ்வை குலைத்து விடும் என்ற முன் எச்சரிக்கை யோடு, தனது வாழ்க்கையைப் பார்க்க முற்படுகின்ருன். உயிர் உள்ளவரை உறவுக்குள்ளும், உணர்வுள்ளவரை உள்ளத்துள்ளும் அவளோடு வாழ்ந்து, வாழ்வின் அர்த்தத்தை காண விழைகின்ருன்.

---

# கோப்பாயில் நான் கருத்தரங்கு

இக் கருத்தரங்கில் செல்வி நா. விமலாம்பிகை, செம்பியன் செல்வன், யோசப் பாலா ஆகியோர் சிறப்புரைகள் வழங்கினுர்கள். நான் வாசகரிடையே புரிந்துணர்வும் தன்னம்பிகையும். போலிகளை இனம் கண்டு மாண்புமிகு மனிதத்துவத்தை உருவாக்கும் நல்ல சிந்தனைக்கும் பரிமாறப்பட்டன.

தகவல்: வினி

கோப்பாய் நான் வட்டம்
பொறுப்பாளர்: திருமதி, சி. செல்வமலர்
செல்வி. பே. பேரின்பநாயகி
செல்வி. செ. குளோறியா.

---

தயராகிறது பிரதிக்கு முந்துங்கள்.

அறிவுப் பசிக்கு அரிய விருந்தாக "நான்" வெளியீட்டு வரிசையில் புதிய வெளியீடுகள்

வி. பி யின்

## உறவுகளின் இராகங்கள்

(2 - வது பதிப்பு)

T. M. அன்ரனிப்பிள்ளை LL. B. அவர்களின்

## EASY ENGLISH PART - 4

யோசப்பாலாவின்

## திருப்பம் (சிறுகதைத் தொகுதி)

''நான்' தரும் இன்பம் நாம் பெறும் சொர்க்கம்'

தரமான பொருட்கள் நியாயமான விலையில் பெற

நாடுங்கள்

## வீரசிங்கம் ஸ்ரோர்ஸ்

★ பலசரக்கு மாளிகை, ★ கட்டிடப் பொருட்கள்
★ இரும்புச் சாமான்கள் ★ பெயின்ற் வகைகள்
★ பத்திரிகை சஞ்சிகையின் ஏக விநியோகஸ்தர்

உங்கள் தேவைகள் எதுவானாலும்
தொகையாகவும், சில்லறையாகவும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள,

| | |
|---|---|
| வீரசிங்கம் ஸ்ரோர்ஸ் | ரூபேஸ் காட்வெயார்ஸ் |
| 4, கடற்கரை வீதி, | இல: 843 கடற்கரை வீதி, |
| பாஷையூர், | பாஷையூர், |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |

'NAAN' Psychology - Magazine
O. M. I. Seminary Colombuthurai

FUL-VUE

FOR YOUR VISIT

OPTICIANS & DENTAL TECHNICIANS

50, CLOCK TOWER ROAD,
OPPOSIT WELLINGTON
THEATRE JAFFNA



MORAIS